பக்கம்: எட்டு
விலை ரூபா 5-00

27 JAN 2001

# வலம்புரி
# VALAMPURI

லாலா சோப்
அதிர்ஷ்டலாபச்சீட்டு
பரிசுகள்
தங்க நாணயங்களும்
பெறுமதியான சாறிகளும்
ரிக்கற் விபரம் 10/-
லாலா சோப்
அச்சுவேலி
(கி1903)

சங்கு 02 வள்ளுவர் ஆண்டு 2032 தை 14 சனிக்கிழமை (27-01-2001) தொலைபேசி: 3378 ஒலி: 39

### இந்தியாவின் 52வது சுதந்திரதினத்தில்
## குஜராத் மாநிலத்தில் பாரிய நிலநடுக்கம்
## 1000க்கு மேற்பட்டோர் பலி; கட்டடங்கள்நாசம்

இந்தியாவின் குஜராத்மாநிலத்தில் நேற்று ஏற்பட்ட பாரிய நிலநடுக்கத்தால் சுமார் ஆயிரத்திற்கும் மேற்பட்ட பொதுமக்கள் பலியாகினர். கோடிக்கணக்கான பெறுமதிவாய்ந்த கட்டிடங்கள் இடிந்தழிந்தன. 52வது சுதந்திரதின விழாவிற்கு பாரதம் களைகட்டியிருந்த வேளையில் குஜராத் மாநிலத்தில் ஏற்பட்ட இவ் இயற்கை அனர்த்தத்தால் இந்திய நாடு சோகத்தில் மூழ்கியுள்ளது. நேற்றுக்காலை 8 45 மணிக்கு ஏற்பட்ட இப்பாரிய நிலநடுக்கம் இரண்டு வினாடி முதல் இரண்டு நிமிடம் வரை நீடித்திருந்தது. குஜராத்தில் இடம்பெற்ற நிலநடுக்கத்தை அடுத்து அம்மாநிலத்துடனானசகல தொடர்புகளும் துண்டிக்கப்பட்டு விட்டன. இப்போது குஜராத்மாநிலம் இருளில் மூழ்கியுள்ளது. இது இவ்வாறிருக்க பிரதமர் வாஜ்(8ம்பக்கம் பார்க்க)

### அனுருத்தமீது வழக்குத்தாக்கல்

[கொழும்பு]

பிரதிப்பாதுகாப்பு அமைச்சரும், எரிபொருள் மின்சக்தி அமைச்சருமான ஜெனரல் அனுருத்தரத்வத்த மீது கொழும்பு உயர் நீதிமன்றத்தில் நேற்று வழக்கொன்றுதாக்கல் செய்யப்பட்டுள்ளது.

வெள்ளவத்தையில் அமைந்துள்ள கூட்டுறவுச்சங்க எரிபொருள் விற்பனை நிலையத்தை மசகுஎண்ணை கூட்டுறவு நிறுவனம் சுவீகரித்தமை தொடர்பாகவே ரத்

→ 8ஆம் பக்கம் பார்க்க

# ஐ.சி.ஆர்.சி. நிபந்தனை
# சிற்றி ஒவ் றிங்கோ
# சேவையில் தாமதம்

(திருமலை நிருபர்)

**திருமலைக்கும் காங்கேசன்துறைக்கும் இடையில் பயணிகள் கப்பல் சேவையில் ஈடுபட்டுள்ள 'சிற்றி ஒவ் றிங்கோ'' பயணிகள் கப்பலுக்கு வழித்துணை வழங்குவதற்கு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் நிபந்தனை விதித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.**

**சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் விதித்துள்ள நிபந்தனைக்குபாதுகாப்பு அமைச்சு அனுமதி வழங்காது விட்டால் திட்டமிட்ட படி 29ம் திகதி பயணிகள் கப்பல் சேவை இடம்பெற மாட்டாது என்று துறைமுக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.**

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின்வழித்துணையுடன் பயணிகள் கப்பல் சேவையில் ஈடுபடுவதற்கு ''சிற்றி ஒவ் றிங்கோ'' கப்பல் ஆயத்தங்களை மேற் கொண்டு வரும் வேளையில் கப்பல் பிரயாணம் செய்யும் கடல் எல்லைப் பரப்பில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் நிபந்தனை ஒன்றைவிதித்துள்ளது.

''சிற்றி ஒவ் றிங்கோ'' கப்பல் 50 கடல் மைல்தூரத்தில் இருந்தே பயணம் செய்ய வேண்டுமென்ற நிபந்தனையுடனேயே சேவையை ஆரம்

→ 8ஆம் பக்கம் பார்க்க

## அமைப்புகளுக்கு பணம்

## பயணச்சீட்டு

### யாழ் - கொழும்பு பயணம்
## கப்பல்-விமான
## கட்டணம் அதிகரிக்கும்

அமரிக்க டொலரின் பெறுமதி அதிகரித்ததைத் தொடர்ந்து யாழ்- கொழும்பு விமான கப்பல் பயணகட்டணங்கள் அதிகரிக்குமென நம்பப்படுகிறது.

இதேவேளை கொழும்பிலிருந்து யாழ் எடுத்துவரப்படும் பொருட்களுக்கும்கப்பல் கட்டணம், கப்பல்வாடை போன்றன உயர்வடைவதால்பொருட்களின் விலைகளும் வேகமாக அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. (ந)

### நாணயப்பெறுமதி இறந்தது
## ஐ.தே.கட்சியினர் நேற்று
## பிரேதப்பெட்டி ஊர்வலம்!

(கொழும்பு)

ஐக்கியதேசியக்கட்சியால் நேற்று ஸ்ரீகோத்தாவிலில் இருந்து நுகேகொடை சந்தி வரை பிரேதப்பெட்டி ஊர்வலம் நடத்தப்பட்டது.

இலங்கையில் ரூபாவின் நாணயப்பெறுமதி செத்துவிட்டது என்பதைச்சித்தரிப்பதாகவே இப்பிரேதப்பெட்டி ஊர்வலம் இடம் பெற்றுள்ளது.

இவ்வூர்வலத்தில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஐக்கிய தேசியக்கட்சி ஆதரவாளர்கள் கலந்து கொண்டனர். (ந)

### விடுதலைப் புலிகளை விட
## ஐ.தே.கட்சி; ஜே.வி.பி
## வன்முறையில் தீவிரம்

(கொழும்பு)

தமிழீழவிடுதலைப் புலிகளைவிட ஐக்கிய தேசியக் கட்சியும் ஜே.வி.பி.யும் என்ற கோசத்துடன் ஆர்ப்பாட்டம்நடத்தி நாட்டில்வன்முறையைத் தூண்டி விட்டு இனக்கலவரங்களை ஏற்

# ஐ.சி.ஆர்.சி. நிபந்தனை

# சிற்றி ஒவ் றிங்கோ

# சேவையில் தாமதம்

(திருமலை நிருபர்)

**திருமலைக்கும் காங்கேசன்துறைக்கும் இடையில் பயணிகள் கப்பல் சேவையில் ஈடுபட்டுள்ள 'சிற்றி ஒவ் றிங்கோ'' பயணிகள் கப்பலுக்கு வழித்துணை வழங்குவதற்கு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் நிபந்தனை விதித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.**

**சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் விதித்துள்ள நிபந்தனைக்குபாதுகாப்பு அமைச்சு அனுமதி வழங்காது விட்டால் திட்டமிட்ட படி 29ம் திகதி பயணிகள் கப்பல் சேவை இடம்பெற மாட்டாது என்று துறைமுக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.**

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின்வழித்துணையுடன் பயணிகள் கப்பல் சேவையில் ஈடுபடுவதற்கு ''சிற்றி ஒவ் றிங்கோ'' கப்பல் ஆயத்தங்களை மேற் கொண்டு வரும் வேளையில் கப்பல் பிரயாணம் செய்யும் கடல் எல்லைப் பரப்பில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் நிபந்தனை ஒன்றைவிதித்துள்ளது.

'' சிற்றி ஒவ் றிங்கோ '' கப்பல் 50 கடல் மைல்தூரத்தில் இருந்தே பயணம் செய்ய வேண்டுமென்ற நிபந்தனை யுடனேயே சேவையை ஆரம்

→ 8ஆம் பக்கம் பார்க்க

## அமைப்புகளுக்கு பணம் வழங்குவது கடும் குற்றம்

### படைத்தரப்பு எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். வணிகர்கள் எந்தவொரு அமைப்புகளுக்கும் பணம் வழங்கக்கூடாதென படைத்தரப்பு எச்சரித்துள்ளதாக நேற்று இடம்பெற்ற பத்திரிகையாளர், மாநாட்டின் போது வர்த்தகர் சங்கத்தலைவர் தெரிவித்துள்ளார்.

512 வது படைப்பொறுப்பதிகாரி யாழ். வணிகர் கழக தலைவரை அழைத்து இது

→ 8ஆம் பக்கம் பார்க்க

## பயணச்சீட்டு

### திங்கட்கிழமை

(யாழ்)

சிற்றி ஒவ்றிங்கோவின்முதலாவது பயணத்திற்காக இன்று வழங்கப்படவிருந்த பயண சீட்டுக்கள் எதிர்வரும் திங்கட்கிழமையே வழங்கப்படுமென ரான் அமைப்பைச் சேர்ந்த எஸ். குகராஜன் தெரிவித்துள்ளார். (ந)

## கப்பல்-விமான

## கட்டணம் அதிகரிக்கும்

அமரிக்க டொலரின் பெறுமதி அதிகரித்ததைத் தொடர்ந்து யாழ்- கொழும்பு விமான கப்பல் பயணகட்டணங்கள் அதிகரிக்குமென நம்பப்படுகிறது.

இதேவேளை கொழும்பிலிருந்து யாழ் எடுத்துவரப்படும் பொருட்களுக்கும்கப்பல் கட்டணம், கப்பல்வாடை போன்றன உயர்வவடைவதால்பொருட்களின் விலைகளும் வேகமாக அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. (ந)

## நாணயப்பெறுமதி இறந்தது ஐ.தே.கட்சியினர் நேற்று பிரேதப்பெட்டி ஊர்வலம்!

(கொழும்பு)

ஐக்கியதேசியக்கட்சியால் நேற்று ஸ்ரீகோத்தாவிலில் இருந்து நுகேகொடை சந்தி வரை பிரேதப்பெட்டி ஊர்வலம் நடத்தப்பட்டது.

இலங்கையில் ரூபாவின் நாணயப்பெறுமதி செத்துவிட்டது என்பதைச்சித்தரிப்பதாகவே இப்பிரேதப்பெட்டி ஊர்வலம் இடம் பெற்றுள்ளது.

இவ்வூர்வலத்தில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஐக்கிய தேசியக்கட்சி ஆதரவாளர்கள் கலந்து கொண்டனர். (ந)

## விடுதலைப் புலிகளை விட ஐ.தே.கட்சி ; ஜே.வி.பி வன்முறையில் தீவிரம்

(கொழும்பு)

தமிழீழவிடுதலைப் புலிகளைவிட ஐக்கிய தேசியக் கட்சியும் ஜே.வி.பி.யும் நாட்டின் வன்முறையைத் தூண்டும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதாக ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் செயலாளரும் அமைச்சருமான எஸ் பி. திஸாநாயக்காவிடுத்த அறிக்கையில்தெரிவித்துள்ளார்.

அந்தஅறிக்கையில் மேலும் தெரிவித்திருப்பதாவது:

ஐக்கியதேசியக் கட்சியும் ஜே;வி.பி.யும் விலை வாசி உயர்வுகளை கண்டிப்பது என்ற கோசத்துடன் ஆர்ப்பாட்டம்நடத்தி நாட்டில்வன்முறையைத் தூண்டி விட்டு இனக்கலவரங்களை ஏற்படுத்த அத்திவாரமிடுகின்றன:

இதில்மக்கள் மிகுந்தகவனமாகவும் எச்சரிக்கையாகவும் இருக்கவேண்டும்.

அடுத்த ஆறுமாதங்களில் பயங்கரவாதத்தை ஒழித்து நாட்டின் விலைவாசிஉயர்வுப் போராட்டத்தை மழுங்கடிப்போம் என்றும் அமைச்சர் திஸா நாயக்கா தெரிவித்துள்ளார்: (வ)

# மட்டு. பல்கலைக்கழக சமூகம் ''தமிழோசை'' எழுச்சிக்குத் தயார்!

(மட்டக்களப்பு)

கிழக்கிலங்கைப் பல்கலைக் கழக சமூகத்தினல் சுயநிர்ணயம், தாயகக் கோட்பாடு என்பவற்றை வலியுறுத்தியும், அரசு உடன் யுத்தத்தை நிறுத்தி புலிகளுடன் பேச வேண்டும் என்பதை வலியுறுத்தியும்.

அடுத்த வார முற்பகுதியில் '' தமிழோசை '' எழுச்சி நிகழ்வு அனுஷ்டிக்கப்படவுள்ளது. இதற்கான ஏற்பாடுகளில் பல்கலைக் கழக சமூகம் ஈடு பட்டுள்ளது.

இதேவேளை கடந்த 17 ந் திகதி யாழ் பல்கலைக் கழக சமூகம் பொங்கு தமிழ் எழுச்சி நிகழ்வை நடத்தியதும் தெரிந்தே. (ந)

## அரசுக்கு எதிராக கண்டியில் ஆர்ப்பாட்டம்

கண்டி மாநகர சபையின் ஆறாம் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சிஉறுப்பினர்கள் கண்டி மாநகரசபைச்சந்தியில் அரசிற்கெதிரான ஆர்ப்பாட்டமொன்றை நேற்று நடத்தினர்.

இவ்வார்ப்பாட்டம் நேற்று பகல்ஒரு மணிமுதல் இரண்டு மணி வரை நடைபெற்றுள்ளது.

மேற்படி ஆர்ப்பாட்டத்தில் கண்டி மாநகர சபையின்

(8ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் தரப்பில்

### உயிரிழந்தோர்

(வவுனியா)

கடந்த 23ம்திகதி கிளாலிப் பகுதியில் இராணுவத்தினர் மேற்கொண்ட தாக்குதலின் போது,

● அருள்மிளா/இசைவிழி (அழகேந்தன் அனுசியா)

→ 8ஆம் பக்கம் பார்க்க

## இடமாற்றம் பெறுவோர் விபரம் வெளியாகியது

(யாழ்ப்பாணம்)

வடக்கு கிழக்கு மாகாண இணைந்த சேவைகள், மற்றும் திணைக்கள சேவைகள் சார்ந்த சுமார் 48 அலுவலர்களின் 2001ம் ஆண்டிற்கான வருடாந்த இடமாற்ற விபரம் அடங்கிய பட்டியலை மாகாண பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் க. பரமலிங்கம் அனுப்பி வைத்துள்ளார்.

ஏப்ரல் மாதம் 2ம் திகதி முதல் அமுல் செய்யப்படவுள்ள இந்த இடமாற்றத்தின் பிரகாரம் இடமாற்றம் பெறுபவர்களின் பெயர் விபரம் வருமாறு:

சங்கானை பிர.செயலகத்தில் கடமையாற்றும் எஸ்: கனகசபாபதி தெல்லிப்பழை பிர.செயலகத்திற்கும், பருத்தித்துறை பி.ர செயலகத்தில் கடமையாற்றும் திருமதி ஜே: சுந்தரலிங்கம் கரவெட்டி பிர செயலகத்திற்கும், நல்லூர் பிர. செயலகத்தில் கடமையாற்றும் திருமதி கே. நாகராஜா, திருமதி ரி. சண்முகநாதன்ஆகியோர்யாழ்ப்பாண பிர.செயலகத்திற்கும,யாழ்ப்பாண பிர: செயலகத்தில் கடமையற்றும் ரி.ஜெயசோதி பி. அமிர்தகௌரிமோகன் ஆகியோர் நல்லூர் பிர.செயலகத்திற்கும், சாவகச்சேரி செயலகத்தில் கடமையாற்றும் என்: தியாகராஜா வவுனியா பிர.செயலகத்திற்கும்,

→ 8ஆம் பக்கம் பார்க்க

நடுவுநிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## சிறு விளம்பரம்

**வீடு விற்பனைக்கு**

பெருமாள் கோயிலடி நாவலர் வீதியில் வீட்டுடன் 5 பரப்பு காணி விற்பனைக்குண்டு தொடர்புதிரு. தேவசகாயம் இல. 28, நக்காலேன், சுண்டிக்குழி. தொலை பேசி 3405. (2462)

## சகோதரர் விடுதலை

கடந்தபுதன்கிழமை ஊரெழுஇராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட நகைத் தொழிலாளிகளான சகோதரர்கள் இருவரும் விடுவிக்கப் பட்டிருப்பதாக உறவினர்களால் மனித உரிமை ஆணைக் குழுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குணசேகரம் குணதாஷன் வயது[22], குணசேகரம்குணசீலன் வயது (20) ஆகிய இருவரும் விடுவிக்கப்பட்டவர்களாவர். (உ-12)

## திரிபோஷா வழங்கல்

பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி தாய் சேய் சிகிச்சைப் பிரிவுகளில் திரிபோஷாமா வழங்கப்பட்டு வருகிறது.

கர்ப்பிணித் தாய்மார்கள் சிசுக்களின் நிறைகள் எடுக்கப் பட்டு அதற்கேற்பதிரிபோஷாமா வழங்கப் பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

அதேவேளை கடந்த முறை போதியளவு திரிபோஷாமா அனுப்பி வைக்கப்படாமையால் சிலருக்கு வழங்கமுடியாமல் போனதாக தெரிய வந்துள்ளது. (உ-23)

## இயங்குமா

ஓட்டுமடம் கலைவாணி சனசமூக நிலையம் நீண்ட காலமாக இயங்காது இருந்து வருகிறது.

அப்பகுதியில் நிலவிய அசாதாரண நிலைமைகளால் இயங்கமுடியாத நிலை கடந்த காலங்களில் காணப்பட்டாலும்,

தற்போது அம் முட்டுக் கட்டை நிலைகள் நீங்கியுள்ளதால், சனசமூக நிலையத்தை திறந்து பொதுமக்கள் பாவனைக்கு உகந்த இடமாக மாற்றப்பட வேண்டும் என அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர் (உ)

## கைதென முறைப்பாடு

யா/சிவன் கோவிலடிப் பகுதியில் வேலை செய்து கொண்டிருந்த வேளை கோப்பாயில் இருந்துஇடம்பெயர்ந்து யாழ். நகரப்பகுதியில் வசித்து வந்த ஆறுமுகம் சந்திரகுமார், (வயது-25)என்ற இளைஞரை கடந்த 22 ஆம் திகதி படையினர் கைது செய்து உடுவில் முகாமில் தடுத்து வைக்கப் பட்டிருப்பதாக உறவினர்களால் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (உ-12)

# பயண அனுமதி வழங்கப்பட்டோர் விபரம்

இம்மாதம் 25 ஆம் திகதி வெளியிடப்பட்ட பட்டியலின் படி, வெளிமாவட்டங்களுக்குப் பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களது இலக்கங்கள் பிரதேச செயலக ரீதியாகத் தரப்படுகின்றன.

**சாவகச்சேரி**

| | |
|---|---|
| 173245 ஏ | 173246 ஏ |
| 173246 பி | |

**யாழ்ப்பாணம்**

| |
|---|
| 170963 ஏ |

**கரவெட்டி**

| | |
|---|---|
| 131027 ஏ | 143592 ஏ |
| 143683 ஏ | 148513 ஏ |
| 154969 ஏ | 155846 ஏ |
| 155846 பி | 155885 ஏ |
| 160255 ஏ | 160255 பி |
| 160255 சி | 160255 டி |
| 160255 ஈ | 162159 ஏ |
| 162159 பி | 162159 சி |
| 162159 டி | 162159 ஈ |
| 162160 ஏ | 162160 பி |
| 162160 சி | 162477 ஏ |
| 164648 ஏ | 164648 பி |
| 164656 ஏ | 154836 ஏ |
| 164854 ஏ | 164854 பி |
| 164855 ஏ | 164949 ஏ |
| 167181 ஏ | 167181 பி |
| 167181 சி | 167181 ஈ |
| 167811 டி | 168106 ஏ |
| 167270 ஏ | |
| 168106 பி | 168106 சி |
| 168106 டி | 169507 ஏ |
| 169568 ஏ | 169570 ஏ |
| 166589 ஏ | 169589 பி |
| 169636 ஏ | 169636 பி |
| 172185 ஏ | 172185 பி |
| 172189 ஏ | 172249 ஏ |
| 172345 ஏ | 172496 ஏ |
| 172537 ஏ | 172570 ஏ |
| 172593 ஏ | |
| 192593 பி | 174402 ஏ |
| 174483 ஏ | 174493 ஏ |
| 174493 பி | 174500 ஏ |
| 174532 ஏ | 174532 பி |
| | 174533 ஏ |
| 174532 சி | 174535 ஏ |
| | 174594 ஏ |
| 174656 ஏ | 176014 ஏ |
| 174656 பி | |
| 176036 ஏ | 177036 பி |
| 176036 சி | 176151 ஏ |
| 176151 பி | 176151 சி |
| 176151 டி | 176185 ஏ |
| 176202 ஏ | 176317 ஏ |
| 176330 ஏ | 176330 பி |
| 176332 ஏ | 176332 பி |
| 176424 ஏ | 176424 பி |
| 176458 ஏ | 176458 பி |
| 176458 சி | 175475 ஏ |
| 176476 எ | 176476 பி |
| 177600 ஏ | 177616 ஏ |
| 177691 ஏ | 177770 ஏ |
| 177770 பி | 177848 ஏ |
| 177848 பி | 177848 சி |
| 177848 டி | 177853 ஏ |
| 177859 ஏ | |

**கோப்பாய்**

| | |
|---|---|
| 128264 ஏ | 149033 ஏ |
| 149174 ஏ | 149174 பி |
| 154405 ஏ | 154405 பி |
| 157217 ஏ | 157217 பி |
| 157217 சி | 157217 டி |
| 157217 ஈ | 159653 ஏ |
| 159673 ஏ | 159673 பி |
| 159673 சி | 159710 ஏ |
| 159716 பி | 159753 ஏ |
| 159753 பி | 163014 ஏ |

| | |
|---|---|
| 163742 ஏ | 1:6956 ஏ |
| 166956 பி | 166971 ஏ |
| 196972 ஏ | 166972 பி |
| 166962 சி | 168282 ஏ |
| 168565 ஏ | 168365 பி |
| 168435 ஏ | 168435 பி |
| | 170442 ஏ |
| 170441 ஏ | 170444 ஏ |
| 170444 பி | 170444 சி |
| 170466 ஏ | 170466 பி |
| 170470 ஏ | 170470 பி |
| 170481 ஏ | 170486 ஏ |
| 170486 பி | 170486 சி |
| 170486 டி | 170486 ஈ |
| 170487 ஏ | 170496 ஏ |
| 170496 பி | 170496 சி |
| 170496 டி | 170521 ஏ |
| 170523 ஏ | 170529 ஏ |
| 170529 பி | 170529 சி |
| 170529 டி | 170544 ஏ |
| 170547 ஏ | 170547 பி |
| 170547 சி | 170547 டி |
| 170547 ஈ | 170560 ஏ |
| 170560 பி | 170561 ஏ |
| 170561 பி | 170577 ஏ |
| 170577 பி | 170577 சி |
| 170585 ஏ | 170585 பி |
| 170585 சி | 170589 ஏ |
| 170590 ஏ | 170598 ஏ |
| 171516 ஏ | 173231 ஏ |
| 173231 பி | 173282 ஏ |
| 173317 ஏ | 173317 பி |
| 173332 ஏ | 173332 பி |
| 173373 ஏ | 173373 பி |
| 173373 சி | 173373 டி |
| 173392 ஏ | 173392 பி |
| 173394 ஏ | 173412 ஏ |
| 173412 பி | 173413 ஏ |
| 174064 ஏ | 174064 பி |
| 177031 ஏ | 177031 பி |
| 177037 ஏ | 177037 பி |
| 177037 சி | 177071 ஏ |
| 177072 ஏ | 177218 ஏ |
| 177274 ஏ | 177274 பி |
| 177288 ஏ | 171288 பி |
| 177290 ஏ | 177294 ஏ |
| 177294 பி | 177298 ஏ |
| 178298 பி | 177300 ஏ |
| 177305 எ | 177305 பி |
| 177313 ஏ | 177315 ஏ |
| 177326 ஏ | 177326 பி |
| 177346 ஏ | 177346 பி |
| 177352 ஏ | 177367 ஏ |
| 177367 பி | 177367 சி |
| 177367 டி | 177367 ஈ |
| 177367 எவ் | 177780 ஏ |
| 177370 பி | 177380 ஏ |
| 177392 ஏ | 177393 ஏ |
| 177394 ஏ | 177397 ஏ |
| 177398 ஏ | 177398 பி |
| 177399 ஏ | 177399 பி |
| 177399 சி | 177403 ஏ |
| | 177403 பி |
| 177405 ஏ | 177405 பி |
| 177411 ஏ | 177414 ஏ |
| 177414 பி | 1774 4 சி |

(நாளை தொடரும்)

## தைக் குளிர்த்தி

அராலி ஆவரம் பிட்டிமுத்து மாரி அம்மன் தைக் குளிர்த்தி உ)சவம்இன்று காலை 10.00 மணியளவில் விசேட அபிசேடகம் தீபாரதனைகளுடன் இடம்பெறும். (உ-42)

## வீதியை திருத்தி உதவுக!

(ஈச்சமோட்டை)

நல்லூர்ப் பகுதியிலுள்ள சிவன் கோவில் வீதி நீண்ட காலமாக திருத்தம் செய்யப் படாது காணப்படுகிறது

நல்லூர் உற்சவ காலங்களில் பிரதான பாதைகள் தடைசெய்யப்படும் போது இப்பாதையூடாகவே பெருமளவான மக்கள் போக்குவரத்து இடம்பெற்றுவருவது வழக்கம்.

ஆயினும் இப்பகுதி வெறும் மண்வீதியாய் காணப்படுவதால் மக்கள் போக்குவரத்து அதிகமாகும் போது அதிக புழுதி எழும்புவதாகவும்,

இதை செப்பனிட்டு உதவுவதால் மக்கள் பெரும் நன்மை அடைவார்கள் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. (உ-59)

## கூட்டம்

[சுன்னாகம்]

யாழ். மல்லாகல் மகாவித்தியாலய பழைய மாணவர் பொதுக்கூட்டம்இன்று காலை 8 மணிக்கு நடைபெற உள்ளது

அன்றையதினம் நிர்வாக சபை தெரிவும் பழைய மாணவர்க்கும் பாடசாலை மாணவர்க்கும் இடையிலான சினேகித பூர்வ கரப்பந்து போட்டியும் இடம்பெற உள்ளது [உ-25]

★ ★ ★

[யாழ்ப்பாணம்]

தொண்டைமானாறு கலைவாணி சனசமூகநிலையத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டமும் நடப்பாண்டு நிர்வாக சபைத் தெரிவும் அண்மையில் நிலையத் தலைவர் இ. ஆழ்வாப்பிள்ளை தலைமையில் நடைபெற்றது.

தலைவராக வ.ரமணசுதன் செயலாளராக சி. தியாகலிங்கம்பொருளாளராகவெ.பிறேமதாஸன் உபதலைவராக அ. கிருபாகரன், உபசெயலாளராக சி. முருகானந்தன் ஆகியோர் தெரிவு செய்யப் பட்டதுடன் மேலும் 6செயற் குழு உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர். [உ]


# தேவை

## கண்காட்சிக்கான பனம்கைப்பணி பொருட்கள்

பனை அபிவிருத்திச் சபை பனம் கைப்பணி பொருட்களை ஏற்றுமதி செய்யும் வாய்ப்பினை ஏற்படுத்தும் நோக்கிலும், உள்நாட்டில் சந்தை வாய்ப்பினை அதிகரிக்கும் பொருட்டும் பரந்த அளவிலான கண்காட்சி ஒன்றினை கொழும்பு மாநகரில் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. இக்கண்காட்சிக்கு ஏற்ற வகையில் கைப்பணி உற்பத்திப் பொருட்களை உற்பத்தி செய்யும் உற்பத்தியாளர்கள் தரமான உற்பத்திகள் வழங்கி உதவுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

தங்களினால் வழங்கப்படும் பொருட்களில் சிறந்தது என தெரிவு செய்யப்படும் பொருட்களுக்கான கொடுப்பனவு உடன் சபையால் வழங்கப்படும்.

05. 03. 2001 ம் திகதி பொருட்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளாகும். பொருட்களை வழங்க விரும்புவோர் எம்முடன் தொடர்புகொள்ளும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

தலைவர்,
பனை அபிவிருத்திச் சபை

மேலதிக விபரங்களுக்கு-
தலைமையகம்
பனை அபிவிருத்திச் சபை
53, கண்டி வீதி,
யாழ்ப்பாணம் (கி/1922)



பாண்டியன்தாழ்வு புனித அன்னம்மாள் ஆலய
பாடகர் குழாம் மகிழ்வுடன் தயாரித்து வழங்கும்

**பாமலர்கள்**

சந்தானாள் பாதங்களில்

பாடல் ஒலிப்பதிவு நாடா

## வெளியீட்டு விழா

காலம்: 28 - 1 - 2001 ஞாயிற்றுக்கிழமை
நேரம்: மாலை 4-00 மணி
இடம்: மறைக்கல்வி நடுநிலையம்
பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பாடகர் குழாம்

புனித அன்னம்மாள் ஆலயம்
பாண்டியன்தாழ்வு, யாழ்ப்பாணம். (2461)



உ
சிவமயம்

## மஞ்சள்நீராட்டு விழா அழைப்பிதழ்

### செல்வி மங்களரூபி சிவகுமார்

காலம்- 28 - 01 - 2001 ஞாயிற்றுக்கிழமை
நேரம்- மு.ப 10. 00 - மு. ப. 11 . 00

| | | | |
|---|---|---|---|
| எங்கள் | தலைமகள் | மங்கள | ரூபி |
| மங்கைப் | பருவம் | எய்திய | மகிழ்வால் |
| அன்னை | நாக . | பூஷணி | அருளும் |
| முன்னைப் | பெரியோர் | ஆசியும் | வேண்டி |
| இங்கித | மாக | இன்பநீர் | ஆட்டும் |
| மங்கள | விழாவிற் (கு) | மகிழ்வுறு | அன்புடன் |
| உங்களை | உரிமையோ (டு) | அழைக்கிறோம் | வந்து |
| தங்கிடும் | தகவால். | ஆசீர் | வதித்து |
| பொங்கிடும் | புத்தூண் | விருந்தினிற் | கலந்து |
| எங்களை | மகிழ்வித் (து) | இதமுடன் | ஏகுக! |

நன்றியும் வணக்கமும்

உங்கள் நல்வரவை உளமார நாடும்
திரு. திருமதி சிவகுமாரும், குடும்பத்தினரும்.

'மங்கள வாசா'
29, சீனிவாசம் வீதி,
கொட்டடி,
யாழ்ப்பாணம். (கி/1923)

27 JAN 2001

### வைத்தியர்களின்
# தொழிற்சங்க நடவடிக்கை தற்காலிகமாக கைவிடப்பட்டது

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலை வைத்தியர்களால் மேற்கொள்ளப்படவிருந்த தொழிற்சங்க நடவடிக்கை தற்காலிகமாக கைவிடப்பட்டிருப்பதாய் தெரியவந்துள்ளது.

வைத்தியர்களால் முன்வைக்கப்பட்ட பிரச்சினைகள் குறித்து அவர்களைச் சந்தித்து அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உரையாடியதுடன், சில உறுதிமொழிகளையும் வழங்கியதையடுத்தே தொழிற்சங்க நடவடிக்கை கைவிடப்பட்டுள்ளது.

வைத்தியர்களுடனான சந்திப்பின் போது அவர்களால் முன்வைக்கப்பட்ட பிரச்சினைகளை சம்பந்தப்பட்ட தரப்புகளுடன் அணுகி தீர்வு காண வழிவகை செய்வதென கூறப்பட்டதாகவும்,

இந்தவகையில், இரத்த வங்கி, பிரேத அறை என்பவற்றினை இரவு வேளைகளிலும் இயங்க வைக்கவும், தற்போது மூடப்பட்டிருக்கும் ஞானம்ஸ் வீதிவழியே உள்ள வாசலூடாக பிரேதங்களை வெளியேற்றவும் பாதுகாப்பு தரப்பினருடன் கருத்தளவில் இணக்கம் காணப்பட்டிருப்பதாக வைத்திய வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அத்துடன், றான் அமைப்பினூடாக வைத்தியர்களின் பயண அனுமதி விடயத்தில் நல்ல தீர்வு அளிப்பதெனவும் சுகாதார அமைச்சு சம்பந்தப்பட்ட விடயங்களை அவ் அமைச்சிடமே நேரடியாக கண்டு பேச இரு வைத்திய பிரதிநிதிகளை கொழும்பு அழைத்துச்செல்ல நடவடிக்கை எடுப்பதெனவும் இச் சந்திப்பின் போது தெரிவிக்கப்பட்டதாக வைத்திய வட்டாரங்களில் இருந்து மேலும் தெரியவந்துள்ளது.

இதேவேளை,

கடந்த புதனன்று மேற்படி வைத்தியர்களின் தொழிற்சங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படவிருந்தமை தெரிந்ததே. (உ-12)

# தேவரதம் படகுச்சேவை இல்லை தீவக போக்குவரத்தில் இடைஞ்சல்

(ஊர்காவற்றுறை)

தீவகப் பிரதேசங்களுக்கிடையேயான போக்குவரத்தில் ஈடுபட்டு வந்த தேவரதம் படகுச்சேவை இம் மாதம் 5 ஆம் திகதியில் இருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளதாய் தெரியவந்துள்ளது.

அனலைதீவு, எழுவைதீவு, நயினாதீவு, ஊர்காவற்றுறை, காரம்பொன், மெலிஞ்சிமுனை கண்ணகையம்மன் கோவிலடித்துறை முகமூடாக பகல்நேர பயணிகள் போக்குவரத்தில் ஊர்காவற்றுறை பிரதேச சபையினால் தேவரதம் படகு, சேவையில் ஈடுபடுத்தப்பட்டு வந்தமை தெரிந்ததே.

இதேவேளை, படகில் ஏற்பட்ட இயந்திரக் கோளாறு காரணமாகவே சேவை இடைநிறுத்தப்பட்டதாய் சம்பந்தப்பட்ட வட்டாரங்களில் இருந்து தெரியவந்துள்ளது.

படகுச்சேவை இன்மையால், பயணம் மேற்கொள்வதில் மேற்படி பகுதி மக்கள் பெருத்த சிரமத்தை எதிர்நோக்கி வருவது குறிப்பிடத்தக்கது. (உ-75)

## மணிவிழா நாயகனுக்கு எளிமையான முறையில் பாராட்டு விழா

(யாழ்ப்பாணம்)

மணிவிழா நாயகன் செங்கையாழியான் அரசபணியில் இருந்து ஓய்வுபெற்றதையொட்டி அவரது இல்லத்தில் மிகவும் எளிமையான முறையில் பாராட்டு விழா ஒன்று எடுக்கப்பட்டது.

இந் நிகழ்வில் வடபுலத்து இலக்கிய வாதிகளும், அரச உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டு பொன்னாடைகள் போர்த்தியும்பாமாலைகளை வழங்கியும் கௌரவித்தனர்.

பேராசிரியர் சண்முகதாஸ் செம்பியன் செல்வன் சிற்பி, சொக்கன்மேலதிக உதவி அரசாங்க அதிபர் து.வைத்திலிங்கம் மற்றும் நல்லூர் பிரதேச செயலகப் பணியாளர்கள் இவரின் இலக்கிய மற்றும் சமூகப் பணிகளைப் பாராட்டிப் பேசினர். [உ-3]

# இளைஞர் சேவை அதிகாரி பதவிக்கான விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது

(ஊர்காவற்றுறை)

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் இளைஞர் சேவை அதிகாரிகள் பதவி வெற்றிடங்கள் நிரப்பப்படவுள்ளன.

இதற்கான விண்ணப்பங்கள் இளைஞர் விவகார அமைச்சு பட்டதாரிகளிடம் இருந்து கோரியுள்ளது.

இப்பதவிக்கு விண்ணப்பிப்பவர்கள் ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக் கழகம் ஒன்றின் பட்டதாரியாகவும் 22 இற்கும் 35 இற்கும் இடைப்பட்டவயதினராக இருப்பதுடன் இளைஞர் தொடர்பான நடவடிக்கைகளில் 3 வருடங்கள் பங்கு கொண்ட அனுபவம் மற்றும் சிறப்பு வகுப்புடனானபட்டதாரியாக இருத்தல் விசேட தகைமையாக கருதப்படுகிறது.

விண்ணப்பங்களை இம்மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னதாக இளைஞர் சேவை பணிப்பாளர் நாயகம் தலைவர் தேசிய சேவைகள் மன்றம் இல. 65 ஹய்லெவல் வீதி மஹரகம என்ற முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது (உ-75)

# ஆட்சி பீடத்தை வசப்படுத்தும் தந்திர நடவடிக்கையே யுத்தம்
## ஐ. தே. க. எம். பி சாடல்

(கொழும்பு)

நாட்டில் இடம்பெற்று வரும் யுத்தத்தை சாதகமாக பயன்படுத்தி ஆட்சியை தொடர்ந்தும் தம்வசம் வைத்திருப்பதே அரசாங்கத்தின் நோக்கமாகும்.

இவ்வாறு ஐ. தே. க நாடாளுமன்ற உறுப்பினர் டபிள்யூ. ஏ. எம். லொக்குபண்டார நாடாளுமன்றத்தில் கூறியுள்ளார்.

நாட்டின் தற்போதைய பொருளாதார நிலைமை தொடர்பான விவாதத்தில் கலந்துகொண்டு பேசுகையிலே அவர் இதனைக் குறிப்பிட்டார்

நாடாளுமன்றம் கடந்த புதனன்று பிரதி சபாநாயகர் சரத்முனசிங்க தலைமையில் கூடியபோது விவாதத்தில் கலந்துகொண்டு பேசிய நாடாளுமன்ற உறுப்பினர் லொக்குபண்டார அவசரகால சட்ட நீடிப்பு பிரேரணை மீதான வாக்கெடுப்பில் ஐ. தே கட்சிகலந்துகொள்ளாது என்றும் தெரிவித்தார். (ந-5)

## இராசி பலன்

27-01-2001

(தை 14, சனி)

திருதியை ந. இ 12 47
சதயம் ந. இ 12 42
ராகுகாலம் 9.36- 11.06
சுபநேரம் 3.36- 5 06

**மேடம்**
தனலாபம், காரியம் கைகூடும், நண்பர்கள் சந்திப்பு, கௌரவம்.

**இடபம்**
நிலைமாற்றம், முயற்சிகள் கைகூடும், அதிகாரம், பிறர் உதவி.

**மிதுனம்**
அச்சமானநிலை, வயிற்றுக் கோளாறு, கட்டுப்பாடு, பிரயாணம்.

**கடகம்**
வியாதி ஏற்படல், எதிர்பாராத பிரச்சினை, பிரயாண பயம், காரியதாமதம்.

**சிங்கம்**
போசன சுகம், தனவரவு, பிரயாணம். காரிய அனுகூலம்.

**கன்னி**
நோய் குணமடையும், முயற்சி கைகூடும். தனவரவு, பகைவர் விலகுவர்.

**துலாம்**
காரிய தடங்கல், வியாதி, தாழ்வு நிலை, குடும்பக் கவலை.

**விருச்சிகம்**
பயந்த சுபாவம், தன்னம்பிக்கை குறைவு, எதிர்பாராத நன்மை, காரிய தாமதம்.

**தனுசு**
சகோதரர் உதவி. பிரயாணம், வாக்கு மேன்மை, முயற்சி கைகூடும்.

**மகரம்**
உஷ்ண வியாதி, வாக்குக் கலகம், பொருள் விரயம், கௌரவக் குறை.

**கும்பம்**
தெளிந்த சிந்தை, சயன சுகம் ஜனவசியம், காரிய ஜெயம்.

**மீனம்**
பொருள் விரயம், பீதாசிந்தை, கோபப்படுதல், காரிய அலைச்சல்

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.)

வளவன்

# சங்கே முழங்கு

## ஏழைகளுக்கு உதவுவது சமூகத்தின் கடமையே

மேற்படி விடயம் சம்பந்தமாய், சு. சிவராசா, நல்லூர், என்பவரின் கூற்றை நிராகரிப்பதை விட என் போன்றோரால் ஏற்றுக் கொள்ள முடியாது.

இவர் பொறாமை மன உணர்வால் எழுதியுள்ளதாகக் கருத வேண்டியுள்ளது. இவரது உணர்வு அலை நல்லூர், தெல்லிப்பழையை மையமாகக் கொண்டுள்ளதை உணர முடிகிறது.

ஆலயங்களுக்கு உதவுவது சமூகமே, அப்படியென்றால் அப்பணத்தில் சமூக சேவைக்கு செலவு செய்வதில் என்ன தவறு. இறைவன் ஒவ்வொருவரிடமும் குடி கொண்டிருக்கிறார் என்ற உண்மையை உணர முடியாதவராய் சிவராசா இருப்பது வருந்தத்தக்கது. ஆகவே ஆலயங்கள் உருவாக்கப்பட்டது பாமர மக்களை இறைசிந்தனையில் ஊக்குவிக்கவே.

மக்கள் பசி பட்டினியுடன் இருந்தால் தெய்வ நம்பிக்கையில் நாட்டம் வராது. ஆகவே கோபுரம், திருப்பணி வேலைகள் செய்வதால் பசி தீராது என்பதை உணர வேண்டும்.

ஆகவே இவர் கூறும் பெயருக்கும் புகழுக்குமாக, இவர் கூறாமல் இயங்கும் அம்மணி ஒரு மாபெரும் சக்திக்கு ஒப்பானவர். அந்தச் சக்தியை நல்லூர் ஆலய சக்தியுடன் ஒப்பிடுவது கிணற்றுத் தவளையை ஒத்தவர்களுக்கே பொருத்தமானது என்பதைக் கூறி, முன்பின் யோசனையுடன் கடிதம் எழுதுவது நல்ல பலனைத் தரும், மற்றவர்களால் ஏற்க முடியும்.

க. சங்கரலிங்கம்
நல்லூர்.

# செய்தித் துளிகள்

### குடும்பப்பெண் நஞ்சிடம் தஞ்சம்

(யாழ்ப்பாணம்)

குடும்பத்தகராறு காரணமாக நஞ்சிடம் தஞ்சம் புகுந்த பெண்மணி பரிதாபமாக பலியானார்.

குரும்பசிட்டியில் இருந்து இடம் பெயர்ந்து சுன்னாகத்தில் வசித்து வந்த நான்குபிள்ளைகளின் தாயான நாகரராசா சீதா (வயது 38) என்பவரே இவ்வாறு மரணமடைந்துள்ளார்

நஞ்சருந்தி ஆபத்தான நிலையில் யாழ். போதனா வைத்தியசாலைக்கு எடுத்து வரும் வழியில் இவர் உயிர் பிரிந்ததாக தெரியவந்துள்ளது.

மரண விசாரணையின் பொருட்டு சடலம் யாழ். போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டிருந்தது (உ-104)

### வருடாந்த மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ். தெல்லிப்பழை யூனியன் கல்லூரி வருடாந்தஇல்ல மெய்வல்லுநர் சுவட்டுமைதானப் போட்டி இன்று பி. ப 1.30 மணிக்குஅதிபர் சு. புண்ணியசீலன் தலைமையில் கல்லூரி மைதானத்தில் இடம் பெறவுள்ளது.

இந் நிகழ்வில், வலிகாமம் கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி றெஜினா இருதயநாதன் பிரதம விருந்தினராக கலந்து கொள்கிறார்.

சிறப்பு விருந்தினர் மற்றும் கௌரவ விருந்தினராக வலிகாமம் வலய கணக்காளர் க. பொன்னுத்துரை வலிகாமம் வலய உடற்கல்வி உதவிக் கல்விப்பணிப்பாளர் வி. பாலசிங்கம், தெல்லிப்பழை கோட்டக்கல்விப்பணிப்பாளர் ஆ. வ கணேசலிங்கம் ஆகியோர் கலந்து கொள்கின்றனர். (உ)

### புனரமைப்பு பணிகள்

(இணுவில்)

புன்னாலைக்கட்டுவன் வடக்கு ஐயனார் ஆலயத்தின் புனரமைப்புப்பணிகள் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன.

300 வருடகால பழமை வாய்ந்தமேற்படி ஆலயத்தின் மூலஸ்தானம் இந்திய ஆலயங்களின் அமைப்பை ஒத்த நான்கு வாயில்களை உடையதாகஅமைக்கப்பட இருப்பது குறிப்பிடத்தக்கது (உ- 49)

### ஆசாரிய அபிஷேகம்

(மந்துவில்)

துன்னாலை ஸ்ரீ கண்ணகை அம்மன் பரம்பரை பூசகரும் ஆதீனமுமாகிய சிவத்திரு சிதம்பரப்பிள்ளைக்குரு இந்திரராஜா ஐயாவுக்கு 29ஆம் திகதி திங்கட்கிழமை ஆசாரியாபிஷேகம் நடைபெறவுள்ளது. (உ-39)

### தங்குமடம் அமைப்பு

(மண்டைதீவு)

வேலணை பிரதேசசபையினால் நயினாதீவு செல்லும் யாத்திரீகர்கள் தங்கிச் செல்வதற்கென குறிகட்டுவானில் தங்குமடம் ஒன்று அமைக்கப்பட்டு வருகிறது.

வடக்கு-கிழக்கு புனர்வாழ்வு புனரமைப்பு அதிகார சபையினால் ஒதுக்கப்பட்ட 10 இலட்சம் ரூபா நிதியில் இருந்து இம்மடம் அமைக்கும் வேலைகள் இடம்பெற்று வருகின்றன.

மடம் அமைக்கும் பணிகள் இவ்வருடம் பங்குனி மாதமளவில் நிறைவெய்தும் என எதிர்பார்க்கப்படுகிறது. (உ-11)

### கூட்டம்

[கரணவாய்]

கரணவாய் மத்தி கருணையம்பதி சனசமூக நிலையத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் நாளை பி. ப 3.00 மணிக்கு நிலைய முன்றலில் தலைவர் ச. பாலசுந்தரம் தலைமையில் நடைபெறும். (உ-27)

### நீர் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபையினால் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த நன்நீர் விநியோகம் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (உ)

# செய்தித் துளிகள்

## வீடியோ படக்காட்சி

[யாழ்ப்பாணம்]

யாழ். பல்கலைக்கழக புற நிலைப் படிப்புகள் அலகும் திரைப்பட வட்டமும் இணைந்து வழங்கிவரும் திரைப்படக்காட்சித் தொடரில் ''தமிழ் மத்திய தர சினிமாவில் கமலஹாஸன்'' என்ற தலைப்பின் கீழ் மூன்றாவது படமாக சந்தானபாரதியின் ''குணா'' என்னும் திரைப் படம்இன்று மு.ப 10-00மணிக்குபுவியற்துறைமண்டபத்தில் காண்பிக்கப்படவுள்ளது.

ஆர்வலர்கள் எவரும் கலந்து கொள்ளலாம் எனபுற நிலைப் படிப்புகள் அலகின் இணைப்பாளர் பேராசிரியர் இரா சிவச்சந்திரன் தெரிவித்துள்ளார். [உ]

## இளைஞர் நண்பன் வெளியாகியது

(ஈச்சமோட்டை)

இளைஞர்களுக்கான வழிகாட்டற் பிரசுரமாக தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் யாழ். மாவட்ட அலுவலகத்தினரால் ''இளைஞர் நண்பன்'' எனும் காலாண்டு பிரசுரம் வெளியிடப்பட்டுள்ளது.

இதில் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின்செயற்பாடுகள் பற்றியும் இளைஞர்களை நல்வழிப்படுத்தும் கட்டுரைகளும் இளைஞர் சிந்தனையைத்தூண்டும் கவிதைகள் மற்றும் பொது விடயங்கள். செய்திகள் என்பன அடங்கியுள்ளன.

இப்பிரசுரம் 3 மாதங்களுக்கு ஒருதடவை தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் யாழ் மாவட்ட அலுவலகத்தினரால் வெளியிடப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. [உ-59]

## இந்து நாகரிக இந்துசமய பாடப் புத்தகம்

[யாழ்ப்பாணம்]

அனைத்து இலங்கை இந்து வாலிபர் சங்கம் கல்விப் பொதுத்தராதர உயர்தர வகுப்பு மாணவர்களுக்கான இந்து நாகரிகம், இந்துசமய பாடப்புத்தகங்களை விரைவில் வெளியிடுவதற்கான ஆயத்தங்களில் ஈடுபட்டு வருகின்றது.

இப்பணிக்கென 14 பேர் கொண்ட அறிஞர் குழு ஒன்று நியமிக்கப்பட்டிருப்பதாக அதன் பொதுச் செயலாளர் த. மனோகரன் தெரிவித்துள்ளார். [உ]

## உறவுகளை மீட்க நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

கடந்த வருடம் ஒக்டோபர் மாதம் மட்டுவில் பகுதியில் இடம்பெற்ற மோதல் சம்பவத்தின் போது படையினரிடம் சிக்கியவர்கள் தொடர்பான விபரங்களை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினர் வன்னியில் உள்ளஉறவினர்க்கு கடிதமூலம் அறிவித்துள்ளனர்.

இதனையடுத்து வன்னியில் உள்ள உறவினர்கள், அவர்களை விடுவித்து பாதுகாப்பில் வைத்திருக்க நடவடிக்கை எடுக்குமாறு இங்குள்ள உறவினர்களைக் கோரியிருப்பதாக தெரியவந்துள்ளது. (உ-12)

## வீதி திருத்தம்

[மண்டைதீவு]

நீண்ட காலமாக திருத்தம் செய்யப்படாது போக்குவரத்துக்கு இடையூறளித்து வந்த பெருங்குளம் முத்துமாரி அம்மன் வீதியை, வீதி அபிவிருத்தித் திணைக்களம் திருத்தியமைத்துள்ளது. [உ-11]

## கருத்துரை

(யாழ்ப்பாணம்)

சர்வதேச மார்க்சிய குழுவின் யாழ் கிளையின் ஏற்பாட்டில்நாளைமு.ப 10மணியளவில் 'சிற்றி கோல்' லில் இலங்கையில் சமதர்ம இயக்கம் ஒரு வரலாற்று நோக்கு எனும் தலைப்பிலான கருத்தரங்கு ஒன்று இடம்பெறவுள்ளது.

தோழர் வி.சின்னத்தம்பி (பாரதிநேசன்) தலைமையில் இடம்பெறும் இந் நிகழ்வில் தோழர்கள் சொ. சிவபாலன் த குகநேசன், ச தியாகலிங்கம் ஆகியோர் கலந்து கொள்கின்றனர் (உ)

## கையெழுத்து வேட்டை

(யாழ்ப்பாணம்)

இலங்கையில் உள்ள பத்துப் பேரை இந்துப்பெரியார் வரிசையில் சேர்த்துக் கொள்ளும்படி சம்பந்தப்பட்ட அமைச்சைக் கோரும் கையெழுத்து வேட்டையில் அனைத்து இலங்கை இந்துவாலியர் சங்கம் இறங்கியுள்ளது.

கைலாயநாதக் குருக்கள் வைத்திய கலாநிதி க வேலாயுதபிள்ளை, ஆத்மஜோதி, ந. முத்தையா, க. இராமச்சந்திரன், வி.த குமாரசாமி, க. கனகராசா, முதலாவது நல்லைக்குருமகா சந்நிதானம் ஆகியோர் இந்தப் பத்துப் பேரில் அடங்குவர். [உ]

## இலவச வைத்திய பரிசோதனை

[யாழ்ப்பாணம்]

யாழ். லயன்ஸ் கழகம், 28 ஆம் திகதி நாளை ஞாயிற்றுக்கிழமைநெல்லியடி வடக்கு மெதடிஸ்த மிஷன் தமிழ்கலவன் பாடசாலையில் இலவச கண்பரிசோதனை, கண்ணாடி வழங்கல் மற்றும் இரத்த அழுத்தம் நீரிழிவு க்ஷயநோய், மலேரியா ஆகிய பொது வைத்தியப் பரிசோதனைகளை நடத்தவுள்ளது.

இந் நிகழ்வில் வைத்தியர்கள் மருத்துவ பீட மாணவர்கள் கலந்து கொண்டு வைத்திய பரிசோதனைகளை நடத்தி இலவச மருந்துகளை வழங்கவுள்ளனர்.

வறிய பாடசாலை மாணவர்க்கு அன்றைய தினம் இலவச சீருடையும் வழங்கப்படும். [உ]

## நேர்முகத் தேர்வு

(ஈச்சமோட்டை)

யாழ்ப்பாணத் திருமறைக் கலாமன்றத்தின் கவின் கலைகள் பயிலகத்திற்கு இரண்டாயிரத்து ஒராம் ஆண்டுக்கான புதிய மாணவர்களை தெரிவு செய்யும் நேர்முகப் பரீட்சை நாளை திருமறைக் கலாமன்றத்தில் இடம்பெறவுள்ளது (உ-59)

## அராலியில் ஆண்டுவிழா

(யாழ்ப்பாணம்)

அராலி தெற்கு களவத்துறை சனசமூக நிலையத்தின் ஆண்டு விழா இன்று மாலை 6மணிக்கு நிலையத் தலைவர் க.இரத்தினசிங்கம் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிமேற்கு பிரதேச சபைத்தலைவர் ந.திரிலோகநாதனும் கௌரவ விருந்தினராக பிரதேச சபை செயலாளர் மா.புலேந்திரனும் கலந்து கொள்வர்.

இவ்விழாவில் சிறுவர் கலை நிகழ்வுகள் நாடகங்கள், பட்டிமன்றம், இன்னிசை கானங்கள் ஆகிய கலை நிகழ்வுகளும் இடம் பெறுமென்று நிலையச் செயலாளர் எஸ்.ஜெயக்குமரன் தெரிவித்துள்ளார். (இ)

# திருமலை மாவட்ட அரச அதிபராக தமிழர் ஒருவரை உடன் நியமிக்குக!

## அ.இ.அ ஊழியர்சங்கம்ஜனாதிபதிக்குகடிதம்

(திருகோணமலை)

தமிழர் ஒருவரை திருகோணமலை மாவட்டத்தின் அரச அதிபராக நியமிக்கும்படி ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவை அகில இலங்கை அரச பொது ஊழியர் சங்கம் கோரியுள்ளது.

அண்மையில் இச் சங்கத்தின் திருமலை மாவட்ட கிளைப் பொதுக் கூட்டம் இடம்பெற்றது அக் கூட்டத்திலேயே மேற்படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

திருகோணமலை மாவட்டத்தில் கடந்த இரு நூற்றாண்டுகளாக இடம் பெற்று வருகின்ற சிவில் நிர்வாகத்தில் அரசாங்க அதிபர் பொறுப்பை தமிழரோ அல்லது முஸ்லிம் சமூகத்தவரோ வகிக்கவில்லை. அத்துடன் இலங்கையின் சுதந்திர காலம் முதல் இன்று வரை ஆட்சியிலுள்ள அரசாங்கங்கள் இம் மாவட்டத்துக்கு சிங்களவரையே நியமித்து வருகின்றது.

எனவே இந் நிலைமையை மாற்றி தமிழர் ஒருவரையோ அல்லது முஸ்லிம் சமூகத்திலிருந்து ஒருவரையோ அரசாங்க அதிபராக நியமிக்க ஜனாதிபதி நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் அவ்அமைப்பு மேலும் தெரிவித்துள்ளது.

இதே வேளை திருகோணமலை மாவட்டத்தில் சிங்களவரிலும் பார்க்க தமிழர்களே அதிகளவில் வாழ்ந்து வருகின்றமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (இ)

பத்திரிகையாளர் திருச்செல்வம் கைது

## சம்பந்தப்பட்ட பொலிஸார்மீதுவிசாரணை

(கொழும்பு)

லேக்கவுஸ் நிறுவனத்தின் பத்திரிகைகளினதும் யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் வலம்புரிப் பத்திரிகையினதும் நிருபரான என் திருச்செல்வம் தனி அறையில்அடைத்து வைத்துத் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக, அகில இலங்கைத் தமிழ்க்காங்கிரஸ் தலைவரும், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான அ. விநாயகமூர்த்தி மனித உரிமைகள் ஆணைக்குழுத் தலைவர் முஸ்தபாவின் கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளார்.

இதனை அடுத்து மனித உரிமை ஆணைக்குழுத் தலைவர் முஸ்தபாவின் பணிப்பின் பேரில் மனித உரிமை அத்துமீறல் விசாரணையாளர் ஸ்ரீதரன் சமர்ப்பித்த அறிக்கையைத் தொடர்ந்து, இச் சம்பவத்தோடு தொடர்புடைய பொலிஸாரை எதிர்வரும் 29ம் திகதி திங்கள் கிழமை மாலை 4மணிக்கு தனது அலுவலகத்தில் விசாரணைக்கு வருமாறு உத்தரவிட்டுள்ளார். (வ-79)

## தீவகத்தில் பெரும்போக நெற்செய்கை பாதிப்பு

[மண்டைதீவு]

தீவக பிரதேசங்களில் கடந்த பல வருடங்களாக பெரும்போக நெற்செய்கை மிகவும் குறைந்தளவில் மட்டுமே இடம்பெற்று வருவதாய் தெரியவந்துள்ளது.

போதிய மழை இன்மை மற்றும் நன்னீர் தடுப்பு அணைகள், உவர்நீர் தடுப்பு அணைகள் அழிக்கப்பட்டமை காரணமாகவே பொதுமக்கள் நெற்செய்கையில் நாட்டம் குன்றிக் காணப்படுவதாக தெரியவந்துள்ளது.

இதேவேளை, தீவகப்பகுதியில் ஏனைய துறைகள் அபிவிருத்தி செய்வது தொடர்பான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ள போதிலும் விவசாயத் துறையை விருத்தி செய்வதற்கு போதிய நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை என விவசாயப் பெருமக்களால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. [உ-11]

## யுத்த நிறுத்தத்திற்கும் எமக்கும் தொடர்பில்லை

### இராணுவஉயரதிகாரிதகவல்

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் ஒருதலைப்பட்ச யுத்த நிறுத்தம் தொடர்பிலோ அல்லது அது நீடிக்கப்பட்டுள்ளது தொடர்பிலோ நாம் எந்த விதமான முடிவையும் எடுக்க முடியாத நிலையில் இருப்பதாக இராணுவ உயர் அதிகாரி ஒருவர் ரிபிசிக்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான முடிவுகளை அரசியற் தலைவர்களே எடுக்க முடியும் என்றும், அவர்கள் எடுக்கும் அரசியல் முடிவுகளை செயற்படுத்தும் பணிமாத்திரமே தமக்கு மட்டுப்படுத்தப்பட்டிருப்பதாகவும் அந்த உயர் அதிகாரி தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் தற்போதைய முடிவுகள் கட்சி அரசியலை முன்வைத்து எடுக்கப்படுவதாகவும் அவர் குறை கூறியுள்ளார்.

இந்த நடவடிக்கைகளில் சில உயர் இராணுவ அதிகாரிகளின் செயற்பாடு மற்றும் தலையீடு குறித்தும் அவர் விசனம் தெரிவித்துள்ளார். (உ-05)

## பட்டப் பகல், திருட்டு முயற்சியில் இளம் பராயத்தினர்

[சுணடுக்குளி]

பட்டப் பகலில் திருட்டு முயற்சியில் ஈடுபட்ட இரு சிறுவர்கள் உள்ளிட்ட மூவர் கையும் களவுமாக பிடிக்கப்பட்டு யாழ். பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த புதனன்று ஈச்சமோட்டைப் பகுதி வயல் ஒழுங்கை எனுமிடத்தில் ரி. சுரேந்திரன் என்பவர் வீட்டில் இடம் பெற்ற இத் திருட்டு முயற்சி பற்றி தெரிய வருவதாவது.

வீட்டிலுள்ளோர் அலுவல்கள் நிமித்தமாக வெளியே சென்ற நேரம் பார்த்து உட்புகுந்த திருடர் அங்கிருந்த இலத்திரனியல் பொருட்கள் உட்பட வேறு பெறுமதி மிக்க பொருட்களை எடுத்துச் செல்ல ஆயத்தமாகினர்.

அந் நேரம் பார்த்து வீட்டு உரிமையாளர் செல்லவே திருட்டுக் குழுவுக்கு தலைமை தாங்கிய நபர் ஓட்டம் பிடித்ததாகவும் எனினும்அவரைத் துரத்திப் பிடித்ததுடன் மற்றைய 11, 10 வயதுடைய சிறியதிருடர்களையும் பொலிஸில் ஒப்படைத்திருப்பதாகவும்தெரியவந்துள்ளது. (100)

## தீவக கல்வி வலயம் புதியகட்டடத்தில்

இதுவரை காலமும் தனியாருக்குச் சொந்தமான கட்டடத்தில் இயங்கி வந்த தீவக கல்வி வலயம் தற்போது புதிய பணிமனையில் செயற்பட ஆரம்பித்துள்ளது.

வீதி அபிவிருத்தி திணைக்களத்திற்குச் சொந்தமான இக்கட்டடம் கல்வி அமைச்சினால் கொள்வனவு செய்யப்பட்டு சுமார் 8 இலட்சம் ரூபா செலவில் புனரமைப்புச் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (உ-11)

## சைக்கிள் திருட்டு

(மந்துவில்)

அண்மைய நாட்களில் நெல்லியடி சந்தைப் பகுதியில் பல துவிச்சக்கரவண்டிகள் திருட்டுப் போயுள்ளன.

வீதியோரங்களில்விடப்படும் துவிச்சக்கர வண்டிகளே இவ்வாறு திருட்டுப்போயுள்ளன. (உ-39)

## கச்சேரி நல்லூர் வீதியில், இரவு நேர வழிப்பறிக் கொள்ளை வீதியால் செல்வோர் அச்சம்

[ஈச்சமோட்டை]

யாழ்ப்பாணம் கச்சேரி நல்லூர் வீதிப்பகுதியில் வழிப்பறிப்புக் கொள்ளைக் கூட்டமொன்று செயற்பட்டு வருவதாக தெரியவருகின்றது.

யாழ்.கச்சேரி நல்லூர் வீதி ஆசீர்வாதப்பர் தேவாலயத்தை அண்டிய பகுதிகளில் நடமாடும் இத்திருட்டுக்கூட்டத்தினர் இரவு வேளைகளில் இவ்வழியினூடாக பயணிப்போரிடமிருந்து பொருட்கள் மற்றும் பணம் என்பவற்றை கொள்ளையிடுவதில் ஈடுபட்டு வருகின்றனர்.

இருட்டு நேரத்தில் வீதியில் செல்வோருடன் தற்செயலாக மோதுவது போல் மோதி, அவர்களை நிலத்தில் வீழ்த்தியபின் அவர்களால் எடுத்துவரும் பொருட்களைச் சூறையாடிக் கொண்டு மறைந்து விடுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. [உ-59]

பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் ... நூலகம்



## இன்று ஒரு தகவல்

# கலங்காத மனம் வேண்டும்

தேவையற்றுவீசப்படும்வீம்பு வார்த்தைகளும் தவறான விமர்சனங்களும் சுகமான வாழ்வைக் கெடுக்கும்விடங்களாகும்.

நேர்மையான பாதையிலே தங்கள் வாழ்வை ஒழி நடத்திச் செல்பவர்கள் கூட இத்தகைய வீண் பேச்சுக்களால் விம்மிப்போகிறார்கள் சலனமற்று ஓடும் நதியைப் போல், சீராகச் செல்லும் இவர்கள் வாழ்வில் வீணர்களின் வீம்பு வார்த்தைகள் அலைகளை ஏற்படுத்தி ஆடவைத்து விடுகிறது. இவற்றைக் கண்டும் கலங்காதிருக்க திடமனம் கொண்ட ஒரு சிலரால்த்தான் முடிகிறது பூஞ்சோலையில் முட் செடி முளைப்பதும் வெண்நிலவிலே கருங்கறை இருப்பதும் இயற்கைதான் அதற்காக பூமரங்கள் பூர்க்காமலும் நிலவு காயாமலும் இருப்பதில்லையே.

எனவே தென்றலாக தவழும் உங்கள்வாழ்க்கை வீணர்களின் வீண் வார்த்தைகளால் புயலாகி விடக் கூடாது.

'மனதிலுறுதி வேண்டும் வார்த்தையிலே தெளிவும் வேண்டும்' என்ற பாடல் வரிக்கேற்றவாறு வாழ்க்கையை அமைத்துக் கொண்டால் வருங்காலம் நிச்சயம் வசந்தங்களை வழங்கும்.

இதற்கு புத்தபெருமானின் வாழ்க்கையில் நடந்த இந்தச் சம்பவம் துணை போகக் கூடும்.

ஒரு முறை புத்தபெருமான் நல்ல கருத்துக்களைக் கூறுவதற்காக ஒரு கிராமத்திற்குச் சென்று தனது ஆன்மீக அனுபவங்களையும், நல்ல விடயங்களையும் அவ்ஊர் மக்களுக்கு எடுத்துக் கூறினார்.

ஆனால் அவ்வூர் மக்களோ அவரைக் கடுமையான வார்த்தைகளால் பேசி சினம் கொள்ளக் கூடிய வார்த்தைகளை எல்லாம் அவர் மேல் கொட்டினர். ஆனால் புத்தரோ சாந்தமாக புன்னகைத்து விட்டு அவ் விடத்தை விட்டுச் சென்றார். இதைக் கவனித்துக் கொண்டிருந்த ஒரு வயோதிபர் அவரை அணுகி, 'ஏன் ஐயா அவர்கள் உங்களை ஏசினார்களே! நீங்கள் ஒரு சொல் கூடச் சொல்லாது சிரித்த வண்ணம் செல்கிறீர்களே' என்று கேட்டார்.

அதற்கு புத்தர் 'இது போலத்தான் நான் இதற்கு முன் ஊரிலும் உரையாற்றி நல்ல கருத்துக்களைச் சொன்னேன். அதனால் மகிழ்ந்த அவ்வூர் மக்கள் இனிமையான தின்பண்டங்கள் எல்லாம் தந்தார்கள். நான் அவற்றை உண்பதில்லையாதலால் வேண்ட மறுத்த போது, அவர்களே அவற்றை தங்களுடன் எடுத்துச் சென்றார்கள். அது போலத் தான் இங்கும் எனக்கு நிறையக் கொடுத்தார்கள். ஆனால் அவற்றை நான் ஏற்கவிரும்பவில்லை. எனவே அவற்றை அவர்கள் தானே எடுத்துச் செல்ல வேண்டும். என்று கூறி விட்டு அவ்விடத்தை விட்டு அகன்றார்.

ரீ. ரீ மயூரன்

# தீவக தேங்காய்கள் 5 ரூபாவாக விற்பனை

(யாழ்ப்பாணம்)

தேங்காயின் விலையில் திடீரென பெருமளவில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது

தென்மராட்சிப் பிரதேசத்தில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையை அடுத்து தேங்காய்களின் விலை சடுதியாக குடாநாட்டில் அதிகரித்து பொதுமக்களின் பொருளாதாரத்தில் குறிப்பிடக் கூடிய ளவு தாக்கத்தினை ஏற்படுத்தியது தெரிந்ததே.

இது விடயத்தினை சமாளிக்கும் வகையில், படையினர் அனுமதிபெற்று தீவகப் பகுதிகளில் இருந்து பெருமளவான தேங்காய்கள் எடுத்து வரப்பட்டதையடுத்தே இவ் விலை வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

இந்த வகையில், தீவகத்திலிருந்து எடுத்துவரப்பட்ட தேங்காய்கள் திருநெல்வேலிச் சந்தையில், ஒன்று 5 ரூபாவாக விற்பனையாவதை அவதானிக்க முடிந்தது.

இதேவேளை, தென்பகுதியில் இருந்து கப்பல் மூலம் தனியார் வர்த்தகர்களால் தேங்காய்கள் எடுத்து வரப்பட்டமையும் இவ் விலை வீழ்ச்சியில் தாக்கம் செலுத்தியமை குறிப்பிடத்தக்கது. (உ-104)

# ஊர்காவற்றுறை, 8 வீட்டுத் திட்டம் மீன் நிர்மாணம்

(மண்டைதீவு)

கடந்த 90ஆம் ஆண்டுடிடம் பெற்ற அனர்த்தங்களின் போதுமுற்றாகஅழிக்கப்பட்ட ஊர்காவற்றுறை 8 வீட்டுத் திட்டத்தினைமீள்நிர்மாணம் செய்யும் பணி இடம்பெற்று வருகிறது.

ஊர்காவற்றுறை பிரதேச சபை 12 இலட்சம் ரூபா செலவில் இப் பணியை மேற் கொண்டு வருகிறது.

வரும் மார்ச் மாதமளவில் வீடமைப்பு வேலைகள் முடிவுறுமென்றும், அதன் பின்னர் பயனாளிகளிடம் வீடுகள் ஒப்படைக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-11)

# வேலணைப் பகுதியில் பெற்றோல் தட்டுப்பாடு

(யாழ்ப்பாணம்)

வேலணையில் இயங்கி வரும் ஒரே ஒரு அனுமதி பெற்ற கூட்டுறவுச் சங்க எரிபொருள் விற்பனை நிலையத்தில், கடந்த பல நாட்களாக பெற்றோலுக்குத் தட்டுப்பாடு நிலவி வருகின்றது.

இதனால் யாழ் நகரில் இருந்து வேலணை செல்லும் அரச உத்தியோகத்தர்கள் உட்பட அனைத்துத் தரப்பினரும் பெரும் சிரமங்களை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இங்குள்ள எரிபொருள் விற்பனை நிலையத்தில் இருந்தே நெடுந்தீவு உட்பட அனைத்து தீவக பிரதேசங்களுக்கும் எரிபொருட்கள் எடுத்துச் செல்லப்படுவதும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை இப்பகுதியில் உள்ள தனியார் எரிபொருள் நிலையங்களில் தற்போது பெற்றோல் பெற முடியாதுள்ளதாக பொது மக்கள் தரப்பில் அதிருப்தி தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-104)

## களுத்துறைச் சிறைச்சாலையில்

# தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழர் விடுதலை கோரி உண்ணாவிரதம்

(கொழும்பு)

களுத்துறைச் சிறைச்சாலையில் எதுவித விசாரணையுமின்றி கடந்த மூன்றுவருடகாலமாக தடுத்துவைக்கப்பட்டுள்ள கணேசமூர்த்தி சுரேஸ்குமார் (மன்னார்) என்ற இளைஞன் தனது விடுதலை கோரி நாளை ஞாயிற்றுக் கிழமை தொடக்கம் சாகும்வரையான உண்ணாவிரதப் போராட்டத்தில் குதிக்கப்போவதாக அறிவித்துள்ளார்

1998 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 6 ஆம் திகதி மன்னாரில் வைத்து கைதுசெய்யப்பட்ட மேற்படி இளைஞர்,

அடிப்படைத் தேவைகளைக்கூட பூர்த்திசெய்ய முடியாத நிலையில் தான் சிறையில் வாடுவதாகவும்,

இதற்கு முன்னரும் 4 தடவைகள் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து உண்ணாவிரதம் மேற்கொண்ட வேளை அரசியல் அதிகாரிகளின் உறுதிமொழிகளை நம்பி ஏமாற்றமடைந்ததாகவும்,

சாட்சிகளான பொலிஸார் சமூகம் தராமையும், மொழி பெயர்ப்பாளர்கள் இல்லாமையினாலும் தாமதிக்கப்பட்டுள்ள தனது நீதிமன்ற விசாரணை தொடர்பாக தேசிய மனித உரிமை ஆணைக்குழு மற்றும் தொல்லை தவிர்ப்புக் குழு ஆகியவற்றிடம் முறையிட்டும் பலன்கிட்டாத நிலையிலேயே உண்ணாவிரத முயற்சியில் இறங்கியிருப்பதாக அறிவித்துள்ளார். (உ-5)

# பதம் பார்த்த பாளைக்கத்தி

(மந்திகை)

துன்னாலை கிழக்கு வேம்படிப் பகுதியில் சீவல் தொழிலுக்கு வீதியால் சென்று கொண்டிருந்தசமயம் அவரின் பின்னிருந்த பாளைக் கத்தியை எடுத்து வெட்டியதனால் காயமடைந்த சீவல் தொழிலாழி பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

துன்னாலை வேம்படியைச் சேர்ந்த தம்பிராஜா தயாகரன் (வயது 23) என்பவரே தலையில் காயமடைந்தவராவர்.

அண்மையில் நடைபெற்ற இச்சம்பவம் தொடர்பான விசாரணையை நெல்லியடிப் பொலிசார் மேற் கொண்டு வருகின்றனர். (உ-23)

# கும்பாபிஷேக கிரியைகள்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை, அளவெட்டி கணேஸ்வரக்குருக்கள் கிணற்றடிப் பிள்ளையார் கோவில் ஜீர்ணோத்தரண பிரதிஷ்டா கும்பாபிஷேக கிரியைகளில் இன்று,

யாக பூஜைகள், நவாக்னி விபஜனம் கணபதி அதர்வ சீர்ஷஹோமம், யாகதீபாராதனை, பக்தர்கள் எண்ணெய்க்காப்பு திரிசதி ஹோமம் முதலிய கிரியைகள் இடம்பெறும்.

★ ★ ★

காரைநகர் களபூமி பாலாவோடை குறிஞ்சாக்குளி அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோவில் புனராவர்த்தன உத்தமயாக நவகுண்டபக்ஷமகாயாக கும்பாபிஷேக கிரியைகளில் இன்று,

விநாயகர் வழிபாடு திசாஹோமம் சாந்தி ஹோமம், மூர்த்திஹோமம், மிருத் சங்கிரகணம், யந்திரபூசை, சந்தி அங்குரார்ப்பணம். ஆசார்யாரட்சாபந்தனம், பிரசன்னாபிஷேகம், கடஸ்தாபனம், கலாகர்ஷணம், ஷணஹோமம், யாக பரிவார கும்பபூசை, சலபேரம், நவாக்கின விபஜனம் முதலிய கிரியைகள் இடம் பெறும்.

★ ★ ★

இணுவில், மருதனார்மடம் சுன்னாகம் அருள்மிகு ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேய கோயில் நூதனப் பிரதிஷ்டா மகா கும்பாபிஷேக கிரியைகளில் இன்று,

விசேட சந்தி, பூத சுத்தி, யாக பூசை, ஹோமம், தீபாராதனை, வேத ஸ்தோத்திர பாராயணம் புண்ணியாக வாஸனம் முதலிய கிரியைகள் இடம்பெறும். (உ)

## வேலணையில்,

# வீதியோர மீன் வியாபாரம் விபத்துக்கு வித்திடுமா?

(ஊர்காவற்றுறை)

வேலணைப் பகுதியில், போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுத்துவதுடன், விபத்துக்களுக்கும் வித்திடும் வகையில் வீதியோர மீன் வியாபாரம் இடம்பெற்று வருவதாக தெரியவந்துள்ளது

வேலணைப் பகுதிக்கென மீன் சந்தை ஒன்று நிறுவப் படாமையே, வீதியோரங்கள் இவ்வாறு மீன் சந்தைகளாக மாறக்காரணம் என பொது மக்களால் சுட்டிக்காட்டப் படுகிறது.

எனவே, வேலணையில் மீன் சந்தை நிறுவ விரைந்து நடவடிக்கை எடுப்பதன் மூலம், வீதியோர மீன் வியாபாரத்தினை மட்டுமன்றி, வீண் விபத்துக்களையும் தடுக்க இயலுமென அபிப்பிராயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-75)

## பதினாறு வயதுச் சிறுமியை

# கடத்திய குடும்பஸ்தர் பொலிஸில் ஒப்படைப்பு

(யாழ்ப்பாணம்)

பதினாறு வயதுச் சிறுமியைக் கடத்திச் சென்ற பலேகில்லாடியான ஆசாமி ஒருவரை நேற்றைய தினம் கோண்டாவிலில் இருந்து இணுவில் வரை இழுத்துச் செல்லப்பட்டதை காண முடிந்தது.

இதனை வேடிக்கை பார்ப்பதற்காய் சனங்கள் அவ் வீதிகளில் கூடியதால். போக்குவரத்துக்கள் மிகச் சிரமத்தின் மத்தியில் இடம்பெற்றன.

வீட்டில் கூலித்தொழில் புரியவெனச் சென்று, நயவஞ்சகமான முறையில் பதினாறு வயதுச் சிறுமியைக் கடத்திச் சென்ற சந்தையா வீரசிங்கம் (வயது 24) என்பவர், சம்பவம் நடந்து ஐந்து தினங்களின் பின் சிறுமியின் உறவினர்களால் கண்டு பிடிக்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கும் நோக்கிலேயே இவ்வாறு இழுத்துச் செல்லப்பட்டதாய் அறியமுடிந்தது

இதேவேளை மேற்படி நபர் ஏற்கனவே திருமணமானவர் என்றும், இவ்வாறான நடவடிக்கையில் கைதேர்ந்தவர் எனவும் தெரியவந்துள்ளது. (உ-12)

## சாராயத்திற்கு

# தடை

(மண்டைதீவு)

தீவுப்பகுதி மக்கள்சாராயப் போத்தல்களை எடுத்துச்செல்வதற்கு அல்லைப்பிட்டி கடற்படை சோதனைச் சாவடியில் தடை விதிக்கப்பட்டுள்ளது.

விற்பனை நோக்கின்றி சொந்தத் தேவைகளுக்கென சிறிய அளவில் எடுத்துச் செல்வதற்கும் கடற்படையினர் அனுமதி மறுத்து வருகின்றனர்.

இலங்கையில் நடைமுறையிலுள்ள குடியியல் சட்டப்படி 18 வயதிற்கு மேற்பட்டவர்கள் 2 போத்தல் சாராயத்தை எடுத்துச்செல்ல முடியும்என்பது குறிப்பிடத்தக்கது. (உ-11)

## வவு. வர்த்தகர்

# விடுதலை

(வவுனியா)

கடந்த வருடம் ஆகஸ்ட் மாதம் 19ஆம்திகதி வவுனியாவில் வைத்து கைது செய்யப்பட்ட பிரபலவர்த்தகர் எஸ். சண்முகராசா கொழும்பு நீதிமன்றத்தினால் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளார்:

இவரது கைது தொடர்பாக ஆட்கொணர்வு மனு அவரது மனைவியினால் தாக்கல் செய்யப்பட்டதை அடுத்தே இவர் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பயங்கரவாத தடுப்புச்சட்டத்தின்கீழ் இவர் 97 நாட்கள் கொழும்பில் தடுத்து வைக்கப்பட்டிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (வ)

## மின்னி மறையும்

## மின்சாரம்

(கோப்பாய்)

கோப்பாய் பகுதியில் தினமும் அடிக்கடி மின் தடை ஏற்படுவதாக மின்சாரப் பாவனையாளர்கள் தெரிவிக்கின்னர்.

ஒன்று விட்ட ஒருநாளைக்கே இரவு 6 மணி தொடக்கம் 8 மணி வரையும் மின் வெட்டு மேற்கொள்வதாக தெரிவிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டது.

ஆயினும் கடந்த சில நாட்களாக தொடர்ந்து இவ் வேளை மின் தடை ஏற்படுவதாகவும் பகல் வேளைகளில் அடிக்கடி மின்தடை ஏற்படுவதாகவும் தெரியவருகின்றது. (உ-79)

# திறந்தவெளி அரங்கு

(ஊர்காவற்றுறை)

வேலணையில்திறந்த வெளி அரங்கு ஒன்று அமைக்கப்பட்டு வருகின்றது.

வேலணைப்பிரதேச சபைப் பொது நூலகத்திற்கு அருகாமையில் அமைக்கப்பட்டு வரும் திறந்த வெளி அரங்கு அமைப்பதற்கான நிதியினை வடக்கு புனர்வாழ்வு புனரமைப்பு அதிகார சபை ஒதுக்கீடு செய்துள்ளது.

மேற்படி திறந்த வெளி அரங்கு 2 லட்சத்தி ஐம்பதாயிரம் ரூபா செலவில் அமைக்கப்பட்டுவருவது குறிப்பிடத்தக்கது: (உ-75)

# ஹினியில் மக்கள் மோசமாகப் பாதிப்பு

## உலக நிறுவனங்கள் அறிவிப்பு

(ஹினி)

ஹினியில் அரசியல் சமூக பாதுகாப்பு நிலைமைகள் மிக மோசமடைந்து வருவதாக சர்வதேச உதவிகள் ஸ்தாபனங்கள் தெரிவித்துள்ளன.

ஐ.நா. ஸ்தாபனம் தொடக்கம் மற்றும் அனைத்து சர்வதேச நிறுவனங்களும் இதே கருத்தினைத் தெரிவித்துள்ளன.

ஹினிய எல்லைப் புறத்தில் தீவிரவாதிகளுக்கும் மற்றும் அரசு படைகளுக்குமிடையில் கடும் சண்டைகள் நடைபெற்றுக் கொண்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சண்டைக்கிடையில் இரண்டரை இலட்சம் மக்கள் அகப்பட்டிருக்கிறார்கள். மக்களுக்குத் தேவையான உணவு வகைகள், மருந்து வகைகள் எதுவும் கிடைப்பதில்லை. சர்வதேச உதவி வழங்கும் தொண்டு நிறுவனங்கள் தங்கள் பணிகளைச் செய்யமுடியவில்லை என்று தெரிவிக்கின்றன.

அப்பகுதி மக்களுக்குஉணவு நெருக்கடி கழுத்தை நெரிப்பதாகவும் அனேகர் இதனால்இறக்க நேரிடும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (து)

### பிலிப்பைன்ஸ்

# தற்காப்பு அமைச்சர் பதவி விலகல் அதிபர் அறாயோ ஏற்க மறுப்பு

(மணிலா)

பிலிப்பைன்ஸ் தற்காப்பு அமைச்சர் பெர்ணாண்டோ மெர்காடோ பதவி விலகல் கடிதத்தைக் கொடுத்திருக்கிறார்.

அண்மையில் புதிதாகப் பதவியேற்ற இவரின் பதவி விலகல் கடிதத்தை பிலிப்பைன்ஸ் அதிபர் அறாயோ ஏற்க மறுத்துவிட்டார்.

பதவியிலிருந்து ஓய்வுபெற்ற ஜெனரல் நிஸாங்கோ கபாடியாவை தேசிய பாதுகாப்பு சபை ஆலோசகராகநியமித்ததன் காரணமாகவே தான் பதவியை விலகியதாக மெர்காடோ தெரிவித்தார்.

அவர் செய்தியாளர் மத்தியில் மேலும் குறிப்பிடுகையில், தான் இந்த ஆலோசகர் கபாடியாவை முன்புஒரு பிரச்சினை தொடர்பாக விசாரித்ததாகவும் அவரை இங்கு நியமிப்பதைத் தான் ஆட்சேபித்தே பதவி விலகல் கடிதத்தைக் கொடுத்ததாகவும் மெர்காடோ தெரிவித்தார். (து)

### இந்தோனேஷியாவில்

# புதிய பாதுகாப்பு மசோதா அமைச்சர் மகேந்திரா அறிவிப்பு

(ஜகார்த்தா)

இந்தோனேஷிய அரசு1999 ஆம் ஆண்டு கொண்டு வந்து அமுலில் இருக்கும் கடுமையான உள்நாட்டுப் பாதுகாப்புச் சட்டத்தை விலக்கிக் கொண்டு புதிய நகல் மசோதாவை அறிமுகப்படுத்த இருக்கிறது.

இத்தகவலை இந்தோனேஷியநீதி அமைச்சர் இஸ்ரேல், ஈசா மகேந்திரா நேற்றுமுன்தினம் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் புதிய நகல் மசோதா நாட்டில் இராணுவ ஆதிக்கத்தைத் தவிர்த்து மனித உரிமைகளுக்கு முக்கியத்துவத்தைக் கொடுப்பதாகச் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

முன்னைய பாதுகாப்புச் சட்டத்தால் வன்செயல்களை அடக்கும் அதிகாரம் கூடுதலாக இராணுவத்துக்கு ( ? ) சப்பட்டதென்றும் அதனால் வன்முறைகள் மேலும்வெடித்தனவென்றும் புதிய நகல் மசோதாவால் சகல தப்பினரும் நன்மையடைவர் என்றும் அமைச்சர் ஈசா மகேந்திரா தெரிவித்தார். து

# ஆறுவயதுச் சிறுமி அல்கா ஆங்கிலதட்டச்சில்சாதனை

(மகாராஷ்டிரா)

இந்தியாவைச் சேர்ந்த 6 வயதுச் சிறுமி அல்கா, தட்டச்சு அடிப்பதில் சாதனையை ஏற்படுத்தி கின்னஸில் இடம்பிடித்துள்ளார்.

இந்தியாவில் உள்ள வாணி யவத்மால் ஜில்லாவைச் சேர்ந்த ஆறு வயதான அல்கா என்று அழைக்கப்படும் சிறுமி ஆங்கில தட்டச்சுப் பொறியில் நிமிடத்துக்கு 70 வார்த்தைகளினை தட்டச்சு செய்து சாதனைபுரிந்துள்ளார். (து-9

### செய்திப்பரல்

★ ஸ்பெயின் நாட்டின் புதிய குடிவரவு சட்டத்தை எதிர்த்து வெளிநாட்டு தொழிலாளர்கள் உண்ணாவிரதபோராட்டத்தில் ஈடுபட்டார்கள்.

★ மாவோகிளர்ச்சிக்குழுவின் தாக்குதல் தொடர்பாக நேபாளத்தில் உள்ள அமெரிக்கர்களை எச்சரிக்கையாக இருக்குமாறு வாஷிங்டன் கேட்டுள்ளது.

★ பிலிப்பைன்சில் பதவி துறந்த ஜனாதிபதி நாட்டைவிட்டு வெளியேற புதிய அரசு தடைவிதித்துள்ளது.

★ செச்சினியர்களுக்கு எதிராக மோசமான சித்திரவதைகளில் ரஷ்யப் படையினர் ஈடுபட்டுள்ளதாக மனித உரிமை அமைப்புக்கள் குற்றம் சாட்டியுள்ளன.

(உ-9)

### சுவிற்சலாந்து

# பொருளியல் மகாநாட்டில் சிங்கப்பூர் அமைச்சர்கள்

(சிங்கப்பூர்)

சிங்கப்பூரின் மூத்த அமைச்சர் லீக்குவான்யூ சுவிற்சலாந்தின் டாவோஸ் நகரில் நடைபெறும் உலகப் பொருளியல் மகாநாட்டில் கலந்துகொள்ளச்சென்றிருக்கிறார்.

ஆசியாவின் உலக மயம் ஏற்படுத்தியிருக்கும் தாக்கம் பற்றி இன்றைய மகாநாட்டில் அமைச்சர் லீ பேச இருக்கிறார்.

ஆறு நாட்கள் தொடர்ந்து நடைபெறும் இம்மகாநாட்டில் அமைச்சர் லீயுடன் திருமதி லீயும் தற்காப்பு அமைச்சரும் கலந்து கொள்கிறார்கள் [து]

# பாரதரத்தினா பெறும் வட இந்தியக் கலைஞர்கள்

(புதுடில்லி)

வட இந்திய பிரபல ஷெணாய் இசை வித்துவான் பிஸ்மில்லாக ஹானுக்கும் பல்லாயிரக்கணக்கான இந்தி, தமிழ் உட்பட பல மொழிப் பாடல்களை குறிப்பாகத் திரையிசைப் பாடல்களைப் பாடியலதாமங்கேஸ்கருக்கும் இவ்வாண்டுக்கான பாரதரத்தினா விருது வழங்கப்பட்டுள்ளது.

இந்தியாவின் அதிஉயர்ந்த விருதான பாரதரத்தினா விருது உண்மையில் ஒரு துறையில் துறைபோன மேலாளர்களுக்கு வழங்கப்படுவது வழக்கம். இவ்வாண்டு பாடகி லதாமங்கேஸ் கருக்கும் ஷெணாய் வித்துவான் பிஸ்மில்லாக் ஹானுக்கும் வழங்கப்பட்டது பெருமைக்குரிய விடயமாகும். (து)

# புதியபோர் விமானம் காட்சியில்

(சென்னை)

இந்தியா வடிவமைத்த புதிய ரக யுத்த விமானம் காட்சியில் இடம்பெறவிருக்கிறது.

முற்று முழுதாக இந்தியாவில் வடிவமைக்கப்பட்ட எல். சி. ஏ எனப்படும் இந்த யுத்த விமானத்தை ஏரோ இந்தியாவில் 2001 என்ற விமானத்துறைக் கண் காட்சியில் சேர்க்க இருக்கிறார்கள் (து)

### ரஷ்ய இஸ்ரேல்

# தலைவர்கள் பேசினர்

[மாஸ்கோ]

ரஷ்ய அரசுத் தலைவர் புட்டின் இஸ்ரேலிய அரசுத் தலைவருடன் பேச்சுவார்த்தை நடத்தினார்.

அப்பேச்சு வார்த்தையின் போது மோதல்கள் தீவிரமடையாமல் இருப்பதும் வன்செயல்களைத் தடுத்து நிறுத்துவதும் தற்போதைய நிலையில் மிகமுக்கியமானதாகுமென்று அதிபர் புட்டின் தெரிவித்தார்.

இதேவேளை, அமெரிக்கா பலஸ்தீனம் இஸ்ரேல் ஆகியன எடுத்துள்ள முயற்சிகளை வரவேற்பதாகவும் தெரிவித்தார். (து)

# 2005 இற்குள் சிங்கப்பூர் கடல்நீரைக் குடிநீராக்கும் இயந்திரத்தை வாங்கிவிடும்

[சிங்கப்பூர்]

சிங்கப்பூர் 2005 ஆம் ஆண்டிற்குள்கடல் நீரை குடிநீராக்கும் இயந்திரத்தைபெற்றுவிடுமென்று தெரிவிக்கப்படுகிறது.

இந்த இயந்திரத்தின் மூலம் நாள் ஒன்றுக்கு 136மில்லியன் லீற்றர் நீரை உற்பத்தி செய்ய முடியும் என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்தஇயந்திரத்தின்மூலம்நீர் உற்பத்தி செய்யும் அதே வேளை மின் உற்பத்தியையும் செய்ய முடியும்.

இதனால் மின்சார உற்பத்தியும் நன்னீர் உற்பத்தியும் ஏக காலத்தில் குறைவான செலவில் பெறமுடியுமென செய்திகள் தெரிவிக்கின்றன. [து]

### பயங்கரவாதி

# பின்லேடனின் சொத்துக்கள் பாகிஸ்தானில் தடுத்துவைப்பு

(இஸ்லாமபாத்)

சர்வதேசப் பயங்கரவாதியான பின்லேடனின் பாகிஸ்தானிலுள்ள சொத்துக்களை அரசு அபகரித்துள்ளது.

ஐக்கியநாடுகள் சபையின், பின்லேடனின் சொத்துக்களை அந்த அந்த நாட்டினர் அபகரிக்க வேண்டும் என்ற தீர்மானத்துக் கிணங்க பாகிஸ்தான் முதல் முறையாக நடவடிக்கையில் இறங்கியுள்ளது.

பின்லேடனுக்கு ஆப்கானிஸ்தான் தஞ்சம் கொடுத்து உலக பயங்கரவாதத்துக்கு உதவி வருவதாக ஐ நா குறிப்பிட்டுள்ளது (து)

# பயிற்சி வகுப்பு

(மானிப்பாய்)

வடக்கு கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் அனுசரணையுடன் வலி தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தினால் நடத்தப்படும் தையல் மனையியல் கைப்பணி 2001ம் ஆண்டுக்கான பயிற்சி வகுப்பு கடந்த 22ம் திகதி சண்டிலிப்பாய் கல்வளைப்பிள்ளையார் ஆலயத்திற்கு அருகாமையிலுள்ள கட்டிடத்தில் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் நா. வேதநாயகனினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது (உ-120)

# ஓய்வு பெறுகிறார்

(சுண்டுக்குளி)

கடந்த 7 ஆண்டுகளாக புனித சம்பத்திரிசியார் கல்லூரியில் ஆசிரியராக கடமையாற்றிய வணபிதா ஜீவனதாஸ் பெர்னாண்டோ அடிகளார் ஓய்வுபெற்றுதிருமலை மறைமாவட்ட பாலையூற்று என்றஇடத்திற்கு பங்குப்பணியாற்ற செல்கிறார்.

இவருக்கு அண்மையில் சம்பத்திரிசியார்கல்லூரிஆசிரியர்கள்,மாணவர்கள் ஆகியோரினால் கல்லூரி அதிபர்வணபிதா எ. ஐ.பேர்ணாட்அடிகளார் தலைமையில் பிரியாவிடை உபசாரம்ஒன்று அளிக்கப்பட்டது. (உ-110)

# இரத்ததானம்

[ஈச்சமோட்டை]

யாழ். பல்கலைக்கழகமருத்துவ பீடமும் யாழ்.போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கியும் இணைந்து பாடசாலை மாணவர்களிடையே 'இரத்த தானம் வழங்கல்' நிகழ்ச்சி ஒன்றை நடத்தி வருகின்றனர்.

இதன்படி கடந்த வியாழனன்று புனித பத்திரிசியார் கல்லூரி மாணவர்களிடமிருந்து 'இரத்ததானம்' பெறப்பட்டது.

இதில் 32 மாணவர்கள் தாமாக முன்வந்து இரத்ததானமளித்ததோடு சில ஆசிரியர்களும் இரத்ததானம்அளிதனர் என்பது குறிப்பிடத்தக்கது. [உ-59]

# மாதாந்த கொடுப்பனவு

(மானிப்பாய்)

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் பொதுசன மாதாந்த உதவிப்பணம் மற்றும் தொழு நோய், காச நோய், புற்று நோய் என்பவற்றிற்கான உதவிப் பணத்தைப் பெறுபவர்களினது தைமாதத்திற்குரிய கொடுப்பனவுகள் சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தினால் தபாலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

சம்பந்தப்பட்டவர்கள் தத்தமது தபாலகங்களுக்குச் சென்று கொடுப்பனவுகளைப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர். (உ-120)

### மெய்வல்லுநர்

# போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ். ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி பெப்ரவரி மாதம் 3 ஆம் திகதி சனிக்கிழமை பி.ப 1.30 மணிக்கு அதிபர் எஸ். சிவநடராசா தலைமையில் பாடசாலை மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இப் போட்டியில்,முதன்மை விருந்தினராக உடுவில் கல்விக் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பளர் அ. தற்பரானந்தன் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார். (உ)

# வீதி திருத்தம்

(வட்டுக்கோட்டை)

அராலி யாழ்: பிரதானவீதி திருத்தம் செய்யப்பட்டு வருகிறது. [உ-24]

27 JAN 2001

சீருடைச் செல்வர் சிறுதுளி மாறி
வறங் கூர்ந் தனையது உடைத்து
குறள்

# வலம்புரி

## புரிகிறதா போரின் தாக்கம்

சர்வதேச வர்த்தகத்தின் பாதக விளைவுகளில் ஒன்று வளர்ச்சியடைந்த நாடுகள் வளர்முக நாடுகளைச் சுரண்டுதலாகும். இந்நிலையைப் போக்குவதற்கு வளர்முக நாடுகள் தமது பேரினப் பொருளாதார உறுதியை பேணுவது அவசியமாகும். இதற்கு அமைவாக அரசு வரவு செலவுத் திட்டக் கொள்கைகளை வகுப்பதும், மத்தியவங்கிநாணயக் கொள்கையை கடைப்பிடிப்பதும் கட்டாயத் தேவையாகும். ஆனால் இலங்கை அரசின் வரவு செலவுத் திட்டக் கொள்கைகளில் மூலதனச் செலவில் பெரும்பகுதியை இராணுவத் தளபாடங்களே ஆக்கிரமித்துள்ளன இந்நிலையில் அபிவிருத்தி திட்டங்கள் - அதனூடான உற்பத்தி அதிகரிப்பு - பொருளாதார வளர்ச்சி எல்லாம் வாய்ப் பேச்சளவில் இருந்ததேயொழிய செயலுருப் பெறவில்லை.

யுத்தத்திற்கு கோடிக் கணக்கான நிதியை அரசாங்கம் செலவழித்துக் கண்ட பயன் உயிரிழப்பு - அநாதைச் சிறுவர்களின் அதிகரிப்பு - அங்கவீனர்களின் எண்ணிக்கை உயர்வு - நலிவுற்ற போசாக்கு நிலை என்று ஒரு துயரப் பட்டியலை உருவாக்கியதுதான். அதேவேளை உலக நாடுகளெல்லாம் பரிகசிக்கும் அளவில் இலங்கையின் பொருளாதாரம் சரிவுற்றுள்ளது.

சென்மதி நிலுவையின் பாதக நிலையினைப் பேணுவதற்காக அரசாங்கம் நாணயப் பெறுமதி இறக்கங்களை அவ்வப்போது மேற்கொண்டபோதும்– அந்நடவடிக்கை வெற்றியளித்ததாகத் தெரியவில்லை இப்போது நாணயத் தளம்பல் இலங்கை ரூபாவின் பெறுமதியை வலுவாகக் குறைத்து வருகிறது உலக வங்கியும் சர்வதேச நாணய நிதியமும் வளர்முக நாடுகளின் பொருளாதார பலவீனங்களை ஆராயும் ஆய்வு கூடமாக இலங்கையை பயன்படுத்துகின்றன.

இவற்றுக்கெல்லாம் அடிப்படைக் காரணம் போரென்ற இன ஒழிப்பிற்கு சர்வதேசத்திடம் கையேந்தி நின்றதேயென்றால் அது மிகையில்லை.

---

திறனாய்வுக் களம்

# அறிவுக்கும், ஆன்மீக விருத்திக்கும் உரமூட்டும் ஆசிரிய கலாசாலையின் 'சைவ விளக்கு' நூல்

## மதிவாணர் செ. மதுசூதனன்

இறைவனை வெவ்வேறு நாட்டினர் தமது நாட்டின் தட்பவெப்ப நிலைக்கேற்ப வெவ்வேறு பெயரால் அழைக்கின்றனர். அது மொழி வேற்றுமை மட்டுமேயன்றிப் பொருள் வேற்றுமை அன்று ஒருநாமம் ஒருருவம் ஒன்றுமில்லார்க்கு ஆயிரம் திருநாமம் சொல்லப்படுவதை ஈண்டு குறிப்பிடலாம். யாதொரு தெய்வம் கொண்டீர் அத் தெய்வமாகி யாங்கேமாதொரு பாகனார் தாம் வருவர் என்பது அருள் மொழி. ஒவ்வொருவரும் எமது தெய்வம் அதுவல்ல இதுதான் என்று வாதிடுகிறார்கள். அது பொருந்தாவாதம் என்பதை நூல். கருத்து காட்சி மற்றும் வரலாற்றுச் சான்று அளவைகளாலும் நிரூபிக்க முடியும். அஞ்ஞானிகள் பலர் சுயநல வேட்கையாலும், உலகியல் அறிவாலும், பெத்த நிலையினின்று வேறு, வேறு சமயம் செய்து, வேறு வேறு கடவுள் வழிபாட்டினை வெளிப்படுத்தியுள்ளனர். உண்மையான கடவுள் கொள்கைக்கு பொருளாக விளங்குபவர் சிவன் ஒருவரே. ''தென்னாடுடைய சிவனே போற்றி எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி'' என்று மாணிக்கவாசகரால் சிறப்பித்துக் கூறப்படும், ''தன்னிலைமை மன்னுயிர்கள் சாரத் தருஞ்சக்தி பின்னமிலான்'' ஆகிய எம்பெருமானே முழுமுதற் கடவுளாகவுள்ளவர். சைவ சித்தாந்தம் கடவுள், உயிர், தளை என்ற முப்பொருள் உண்மையை விளக்கி அப்பரம் பொருளையே பிறவா யாக்கைப் பெரியோன், பெண் ஓர் பாகத்தன், என்று சொல்லுகிறது. இத் தெய்வத்தைச் சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய வழிகளில் வழிபாடியற்றும் மெய்ச் சமயமாகிய சைவம் என நாம் கொள்கின்றோம். இச்சைவநெறி நலிவுற்ற காலத்தில் சைவ நாயன்மார்கள் தோன்றித் தேவாரம், திருவாசகம் போன்ற பாமாலை சூட்டி வழிபட்டு மேன்மையுறச் செய்தனர். திருமுறைகளே எமது இந்தச் சைவம் தழைப்பதற்குப் பெரிதும் உதவின;

### சைவம் தழைக்க

பல்வேறு வழிகளாலும் மெருகிழந்து வாழும் எமது சமய தத்துவங்களை விளக்கி வாழ வைப்பதற்கு; இன்றும் பலர் தொண்டாற்றி வருவது கண்கூடு. அந்த வகையில், பலாலி ஆசிரியர் கலாசாலை சைவ மாணவர் மன்றம் சைவத்தையும், தமிழையும் விளங்க வைக்க முன்வந்திருப்பது வரவேற்கத்தக்க ஒன்றாகும். 'சைவ விளக்கு' என்ற நூலை வெளியிட்டு அறிஞர் பெருமக்களினதும் ஆசிரிய மாணவர்களினதும் ஆக்கங்களைத் தந்துதவியுள்ளமை காலத்தின் தேவைக்கு கந்தது எனலாம்.

கலாசாலைக் கீதத்தை முன்வைத்து துரையரின் ''தெய்வத்தின் சந்நிதியில்'' என்ற கவிதையுடன் சஞ்சிகை ஆரம்பித்திருக்கிறது. 'நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும் ஞானசம்பந்தனுக்குலகவர் முன்தாளமீந்து அவன் பாடலுக்கிரங்கும் தன்மையாளனை'' என்று சுந்தரமூர்த்தி நாயனாரால் சிறப்பித்துச் சொல்லப்படும் திருஞானசம்பந்த நாயனார் விளங்க நல்லூரில் அமைந்திருக்கும் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வரின் அருளாசிச் செய்திஇந் நூலுக்குக் கிடைத்திருப்பது மிகவும் பொருத்தமானதேயாகும்; ஆசிரியர்பயிற்சிபெறும் மாணவர்களுக்கு இத்தகைய சஞ்சிகைகள் மிகவும் இன்றியமையாதவை. என்றுசிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அம்மையாரும், இளஞ் சந்ததியினராகிய மாணவ, மாணவிகளை கல்வி ஒழுக்கம் ஆகிய துறைகளில் உரிய முறைகளில் வழி நடத்திச் செல்லும் பொறுப்பு ஆசிரியர்களைச் சார்ந்ததே என்று யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறைத் தலைவர் பேராசிரியர், கலாநிதி ப. கோபாலகிருஷ்ணஐயர் அவர்களும் தத்தமது ஆசியுரைகளில் தெரிவித்துள்ளனர். இச் சஞ்சிகையில், அறிஞர்கள், விரிவுரையாளர்கள் மற்றும் ஆசிரிய மாணவர்களின் ஆக்கங்களை ஒழுங்கு முறையில் பிரசுரித்து, மக்களின் சிந்தனைக்கு விருந்தாக அமையும் விதத்தில் பதிப்பித்த இதழாசிரியர் தி. கிருபாகரன் அவர்களின் அயராத முயற்சியை பாராட்டாமலிருக்க முடியாது.

### கல்வியும், கட்டமைப்பும்

இந்துப் பண்பாட்டு நோக்கில் ஆசிரியன் என்ற நீண்ட கட்டுரையில் பேராசிரியர் கோபாலகிருஷ்ண ஐயர் அவர்கள் ஆழ்ந்த கருத்துகளை முன்வைத்துக்கல்வியின் சிறப்பினை விளக்குகின்றார். பேராசிரியர் வ. ஆறுமுகம் அவர்கள் இந்து மரபுக் கல்வி பற்றிக் குறிப்பிடுகையில் அது தோன்றிய காலப் பின்னணியில் சமூகக் கட்டமைப்பு இறுக்கமானதாகவும் வர்ணப் பாகுபாட்டுக்குட்பட்டதாகவும் மிளிர்ந்தது என்றும் இன்றைய நவீன கோட்பாடுகளின் வெளிச்சத்தில் அணுகினால், குறைபாடுகள் தென்பட்டாலும் அக்காலத்தில் அவை திருப்திகரமாகச் செயற்பட்டது என்பதில் எந்தச் சந்தேகமும் இருக்க முடியாது. என்றும் குறிப்பிடுவது சிந்திக்கற்பாலது.

### மந்திரங்களின் தெய்வவலு

''உளவியல் அடிப்படையில் நோக்கினால் மந்திரங்கள் உடல் வலுவையும், உளவலுவையும் கட்டி எழுப்புகின்றன. அவற்றின் வழியாகத் தெய்வீகவலு முன்னெடுக்கப்படுகின்றது. மந்திரங்கள் மீண்டும் மீண்டும் ஒலிக்கும் பொழுது, அது தெய்வீக வலுவின் மீளாக்கல் ஆகின்றது. அந் நிலையில் அறிவு தூய்மையடைவதாகவும் கொள்ளப்படுகின்றது'' என்று கலாநிதி சபா ஜெயராஜா அவர்களின் பாரம்பரிய அறிவுக் கையளிப்பில் மந்திரங்கள் என்ற கட்டுரையில் சுட்டிக்காட்டப்படுவதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். 'உணர்வுறு மந்திரம் தான் பற்றப் பற்றத் தலைப் படுந்தானே' என்ற திருமூலரின் கூற்றும், உருவேறத் திருவேறும் என்ற நம் முன்னோரின் முதுமொழியும் ஈண்டு நோக்கத் தக்கது

### சைவசித்தாந்தம்

திருமுறைகளில் சைவசித்தாந்தம் என்ற தலைப்பில், சிவத்தமிழ் வித்தகர் சிவ மகாலிங்கம் அவர்கள் சிறந்த மேற்கோள்களை எடுத்துக்காட்டி விளங்கவைக்கின்றார். எமது சமய உண்மைகளை நாம் ஐபந்திரிபறஅறிவதற்குத் திருமுறைகள் மட்டுமே போதுமானவையாகும். நாம் வேறெங்கும்போகத் தேவையில்லை. சமண பௌத்தக் கொள்கைகள் தமிழகத்தில் பரவியிருந்த காலத்தில், மக்களிடம் ஊழ் (வினை) பற்றிய நம்பிக்கை மிகுதியாகக் காணப்பட்டது. ஊழ்வினையைப் போக்கமுடியாது. அனுபவித்தே ஆகவேண்டும், என்ற எண்ணங்கள் வேரூன்றியிருந்தன. இறைவழிபாட்டினால் வினைகளை நீக்க முடியும் என்னும் கருத்துகளைச் சைவம் கூறிற்று. ''நறுமலர்ப் பூவும் நீரும் கொண்டு நாள் தோறும் வணங்குவார்க்கு அறிவினைக் கொடுக்கும்ஆரூரப்பன்'' என்று இறைவன் அருளும் ஞான மொழியின் சிறப்பைச் சுந்தரர் போற்றுவார். இறைவனை ''நம்பினார்க்கருள் செய்யும் கற்பகம்'' என்றும் அடியாரை ஊழ்வினை நலிய வொட்டார் என்றும், எல்லோருக்கும் இல்லை என்னாது அருள் செய்வார் என்றும் சுந்தரமூர்த்தி நாயனார் கூறியவற்றை எடுத்துக் கூறி விளக்கியுள்ளமை மிக மிகப் பொருத்தமாய் அமைந்துள்ளது. ''ஊழையும் உப்பக்கம் காண்பார் உலைவின்றித் தாழாது யுஞற்றுபவர்'' என்ற வள்ளுவர் வாக்கும் சிந்திக்க வைக்கிறது;

### பலாலி ஆசிரியர் கலா சாலை

கவிஞர் சோ. பத்மநாதன் அவர்களின் ''எழுச்சிப்பா'' வானது பலாலியில் அமைந்திருந்த ஆசிரிய கலாசாலையை எம் கண் முன் கொண்டு வந்து நிறுத்துகிறது. இன்னும் பல விடயங்களை ஆசிரிய மாணவர்கள் தமது ஆக்கங்கள் மூலம்எடுத்துக்காட்டியுள்ளார்கள். இவை யாவும் கற்போர்க்கும் கற்பிப்போர்க்கும் சிந்தனைத் தெளிவினை ஊட்டுவனவாக அமைந்துள்ளன;

### சுலோகங்கள் வேண்டாம்

நமக்குப் பொருள் விளங்காத வட மொழிச் சுலோகங்களை அப்படியே எடுத்துக் காட்டுக்களாகத் தருவதைத் தவிர்த்து, அவற்றின் பொருள்களை மட்டும் எடுத்து விளக்கினால் போதுமானது என்பதே எனது அபிப்பிராயம். சைவத் திருமுறைகளுக்கு மேலான கருத்துக்கள் வேற்று மொழிகளில் காணப்பட்டால் அவற்றை எடுத்துக் கூறுவது தவறில்லை. அம்மொழிச் சுலோகங்களை அப்படியே கையாள்வது அவசியமற்றது என்பது என் கருத்து.

ஆயினும், 'சைவ விளக்கு' என்ற இச் சஞ்சிகை மூலம் எமது சமய அறிவைப் பரப்பும் முயற்சியை மனமாரப் பாராட்டாமலிருக்கமுடியாது வாழ்க சைவமும் தமிழும்.

---

யாழ். வருகைக்காக,

# திருமலையில் தவமிருக்கும் பாடப் புத்தகங்கள்

(தென்மராட்சி)

யாழ்ப்பாணக் குடாநாட்டு பாடசாலை மாணவர்களுக்கு அனுப்பப்படவேண்டியபெருந் தொகையான பாடப் புத்தகப் பொதிகள் திருகோணமலையில், கப்பலில் ஏற்றப்படுவதற்காக தவம்கிடக்கின்றன என நம்பத்தகுந்த வட்டாரங்களில் இருந்து தெரிய வந்துள்ளது.

இவற்றினை யாழ்ப்பாணத்துக்கு வரும் கப்பல்களில்அனுப்புவதற்கு அதிகாரிகள் முயற்சிகளை மேற்கொண்டிருந்த போதிலும்கூட வர்த்தகர்கள் தமது பொருட்களை உடனுக்குடன் அனுப்புவதில் காட்டுகின்ற ஆர்வம் காரணமாக கப்பல்களில் போதிய இடவசதியைப் பெறுவதில் சிரமங்கள் எதிர் நோக்கப்படுவதாகவும் அறியப்படுகின்றது.

இதுவரை யாழ் குடாநாட்டிலுள்ள 5 கல்விவலயங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்ட இலவசபாடப் புத்தகங்கள் போதாமல் இருப்பதரல் மாணவர்களும் ஆசிரியர்களும் பெரும் கஷ்டங்களை எதிர் நோக்கிவருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. [உ-77]

---

வீடு,

# பார்க்கச் சென்றவருக்கு கொலைப் பயமுறுத்தல்

(ஈச்சமோட்டை)

மக்கள்இடம்பெயர்ந்துள்ள வளன்புரப் பகுதிக்குவீடுபார்க்கச் சென்ற குடியிருப்பாளர் ஒருவக்கு அங்கிருந்தசிலரால் மிரட்டல் விடுக்கப்பட்டதாக தெரியவந்துள்ளது.

தமது வீடுபார்க்கச் சென்ற அந்நபர் அருகிலிருந்த தனது நண்பனின் வீட்டில் சந்தேகத்துக்கிடமான சிலரின் நடமாட்டத்தை அவதானித்ததாகவும் அவர்களை யாரென விசாரிக்க முயன்றபோது,

தாம் ஒருகுறித்த கட்சிக்காரர் என்றும் மிருசுவில் சம்பவம் போன்று இங்கு நடக்காமல் இருப்பதென்றால் உடன் வெளியேறுமாறும் பணித்தார்களாம்.

அத்தோடு சிலநாள் வரையறையைக் கூறி அதற்குள் உம்மை கவனிக்கிறமாதிரி கவனிக்கின்றோம் எனவும் மிரட்டப்பட்டாராம்.

இவ்வாறு மிரட்டலுக்கு உள்ளானவர் ஒரு சமய, சமூக எழுத்தாளர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (உ-59)

## இடம்பெயர்ந்தோருக்கான உதவித்தொகையை அதிகரிக்குமாறு

# சிவமகாராசா எம்.பி வேண்டுகோள்

(கொழும்பு)

வடபகுதியில் இடம்பெயர்ந்த மக்களுக்கு வழங்கப்பட்டுவரும் நிவாரண உதவிப் பொருட்களின் பெறுமதிபோதுமானதாக இல்லை தற்போதைய சூழ்நிலையில் அங்கு நிலவும் பொருட்களின் விலைகளுக்கேற்ப நிவாரணக் கொடுப்பனவும் அதிகரிக்கப்படவேண்டும்.

தமிழர் விடுதலைக்கூட்டணியின் யாழ்மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.சிவமகாராசா பாராளுமன்றத்தில் தனதுகன்னிப்பேச்சின் போது மேற்கண்டவாறு வேண்டுகோள் விடுத்தார்.

தற்போதையபொருளாதார நிலமைதொடர்பான விவாதத்தில் கலந்துகொண்டு அவர் தொடர்ந்து பேசும்போது கூறியதாவது.

யாழ்ப்பாணத்திற்கு கப்பல் மூலம் பொருட்கள் எடுத்துச் செல்லப்படுவதால் அங்கு பொருட்களின் விலைஅதிகரித்துள்ளது இந்நிலையில் இடம்பெயர்ந்த மக்களுக்கு மாதாந்தம் குறைந்த நிவாரண உதவித்தொகைவழங்கப்படுகிறது இத்தொகை அதிகரிக்கப்பட வேண்டும்

வறுமை நிவாரண எல்லையான 1500ரூபாவை 750 ரூபாவாகக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகத்தெரிகிறதுயாழ்ப்பாணத்தில் இன்றுநிலவும் சூழ்நிலைக்கேற்ப நிவாரணக் கொடுப்பனவுகள் அதிகரிக்கப்பட வேண்டுமெனவும் அவர் கோரியுள்ளார்.

(வ)

---

### தே.அ-அட்டை கண்டெடுப்பு

[யாழ்ப்பாணம்]

யாழ் கொக்குவில் இந்துக் கல்லூரியில் நடைபெற்ற ஐ.பி.எம்.எல் நிறுவனத்தின் கணனி அனுமதிப் பரீட்சையின் போது தவறவிடப்பட்ட அனுஷா கணேசன் புளுமெண்டல் தொடர் மாடி, கொட்டாஞ்சேனை, கொழும்பு-13 என்பவரின் தேசிய அடையாள அட்டை வலம்புரி அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் நேரில் வந்து பெற்றுக்கொள்ளவும்.

(ந)

---

## இரத்ததானம் வழங்கப்படும்

(யாழ்ப்பாணம்)

வடபிராந்திய சத்தியசாயி சேவா நிறுவனங்களின் இணைப்புக் குழுவின் இளைஞர் சபை இரண்டாவது நாளாக நடாத்திவரும் மனித மேம்பாடுகள் ஊடாக ஆன்மீக கண்காட்சி நிகழ்வில் இன்று காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை இரத்த தானம் வழங்கும் நிகழ்வு இடம் பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ந5-104)

---

### ஐ.சி ஆர்.சி...

பித்திருந்தது.

ஆனால் தற்போது அக்கப்பல் 50 கடல் மைல் தூரத்தில் பிரயாணத்தை மேற்கொள்ள முடியா திருப்பதனால் 12 கடல் மைல் தூரத்தில் பிரயாணம் செய்வதற்கு பாதுகாப்பு அமைச்சு அனுமதிக்க வேண்டுமென சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் நிபந்தனை ஒன்றை விதித்துள்ளது. 12 கடல் மைல் தூரத்தில் கப்பல் பிரயாணம் செய்வது தான் உகந்தது என்று காரணம் கூறியே சர்வ தேச செஞ்சிலுவைச் சங்கம் இந்த நிபந்தனையை விதித்திருந்தது.

இந்த நிபந்தனைக்கு பாதுகாப்பு அமைச்சு அனுமதி வழங்கினால் மட்டுமே சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் பயணிகள் கபபலுக்கு வழித்துணை வழங்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது இவ்வாறிருக்க ''சிற்றி ஒவ் றிங்கோ'' கப்பலில் பயணம் செய்வதற்கான ஏற்பாடுகள் முடிவுற்றிருந்த வேளையில் தற்போது ஏற்பட்டுள்ள புதிய சர்ச் சயினால் உடனடிக் கப்பல் சேவைக்குசாத்தியமில்லை என்று கப்பல் கம்பனி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

(வ)

---

### அனுருத்த. .

வத்தமீது வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. [வ]

---

### அமைப்புகளுக்கு.:

பற்றி எழுத்து மூலமாக அறிவித்துள்ளார் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

யாழ் குடாநாட்டில் உள்ள வர்த்தகர்களிடம் சில அமைப்புக்கள் பணம் வசூலிப்பதாக தகவல் அறிந்ததையடுத்தே இவ் அறிவித்தலை தாம்விடுப்பதாகவும், மீறியாருக்காவது பணம் வழங்கினால் அது தண்டனைக்குரிய குற்றமாகக் கருதப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது

[ந-2]

---

### அரசுக்கு.

பிரதி மேஜர் ஏச் எம். ராசீக் உட்பட ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்கள் பலர் கலந்து கொண்டனர்.

அத்தியாவசியப் பொருட்களின் விலை அதிகரிப்பு, ரூபாவின் பெறுமதி குறைப்பு, அரசின் கடும் போக்கு, நாட்டின் நெருக்கடி நிலை என்பன வற்றைக் கண்டித்தே இவ்வார்ப்பாட்டம்இடம்பெற்றுள்ளது.

(ந-4)

---

### குஜராத்---

பாய் குஜராத்தில் ஏற்பட்ட நில நடுக்கம் குறித்து தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக அவசர அவசரமாக அமைச்சரவையை கூட்டியுள்ளார்.

மீட்புப் பணிகள் முடுக்கி விடப்பட்டுள்ளன. சுமார் ஆயிரம் பேர் கட்டிட இடிபாடுகளுக்குள்ளிருந்து மீட்கப்பட்டுள்ளனர். உயிர் காக்கும் மருத்துவப்பொருட்கள் அங்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

இந் நில நடுக்கத்தினால் குஜராத் மாநிலத்திலுள்ள இருபது விமானத் தளங்கள் சேதமடைந்தன. பத்து விமானப்படையினர் பலியாகினர்.

குஜராத்மாநிலத்தில் ஏற்பட்ட நிலநடுக்கம் இந்தியாவின ராஜ்கோட், சுரேந்திரா நகர், சூரத், சியாம்நகர் போன்ற இடங்களிலும் உணரப்பட்டதுடன். பாகிஸ்தானின் ஹைதராபாத்நகரிலும் நிலநடுக்கத்தின் தாக்கத்தால் கட்டடங்கள் இடிந்து இருவர் பலியாகினர்.

(ந)

---

### புலிகள்...

யாழ்மாவட்டம்

- பார்அழகி/சுகந்தினி (சூசைப்பிள்ளை தர்சினி) யாழ்மாவட்டம்
- சுடரினி/றமணி (இராயப்பு ஸ்ரொலா) வவுனியா
- தமிழ்நிலா/தமிழ்அன்பு (சோமசுந்தரம் தேவகி) யாழ்மாவட்டம்

ஆகிய போராளிகள் தமது தரப்பில் உயிரிழந்துள்ளதாக விடுதலைப்புலிகள் அறிவித்துள்ளனர். [5]

---

### இடமாற்றம்-.

தெல்லிப்ழை பிர: செயலகத்தில் கடமையாற்றும் திருமதி எஸ். சிறிகந்தவேல் சங்கானைபிர.செயகலத்திற்கும், கரவெட்டி பிர. செயலகத்தில் கடமையாற்றும் ஏ.எம்: ஜோசப் பருத்தித்துறை பிர. செயலகத்திற்கும் இடமாற்றம் பெற்றுள்ளனர்:

(மிகுதி நாளை தொடரும்)

---


## வாழ்த்துகின்றோம்

யாழ்/ டொன் பொஸ்கோ மாணவனும்

திரு. திருமதி பற்குணராஜா

தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வனுமாகிய

**செல்வன் உபேந்திரா**

கடந்த ஆண்டு நடைபெற்ற 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் 164 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்ததைப் பாராட்டி மனமார வாழ்துவதோடு, தொடர்ந்தும் கல்வி கேள்விகளில் உச்சநிலையை எய்த வேண்டுமென்று நல்லூரான் பாதம் வணங்குகின்றோம்.

திரு, திருமதி. யாதவகுலசிங்கம்.

இராமலிங்கம் வீதி,
திருநெல்வேலி.

(குடும்பம்)

(கி - 1920)


---

## மரண அறிவித்தல்

### பொன்னம்பலம் துரைசிங்கம்

(ஓய்வு பெற்ற புகையிரத நிலைய ஊழியர்)

நுணாவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் அரியாலையை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் துரைசிங்கம் 2001/01/26 வெள்ளிக்கிழமை அன்று காலமாகி விட்டார். இவர் காலஞ் சென்றவர்களான பொன்னம்பலம் செல்லம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ் சென்ற பரமசாமி, சேதுப்பிள்ளை தம்பதியின் அன்பு மருமகனும், இராசலட்சுமியின் அன்புக் கணவரும் அமுதினி, சுசிகரன் ஆகியோரின் அன்புத் தந்தையும். வீரசிங்கம், நவரத்தினராசா, காலஞ் சென்ற தவமணி, கணேஸ்வரி, லீலாவதி, சர்வேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும். இராசேஸ்வரி, மகேஸ்வரி, மயில்வாகனம், குணரத்தினம், புண்ணியசீலன், பரமேஸ்வரி, கணேசலிங்கம், (இ.மி.ச) ஸ்ரீலட்சுமி, கெங்காதேவி, சொர்ணலிங்கம், (இ.மி.ச) அன்னலிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (சனிக்கிழமை) 2001/01/27 அன்று தகனக் கிரியைகளுக்காக பி.ப 2 மணியளவில் (பு.நே) கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

400, நாவலர் வீதி,
அரியாலை,
யாழ்ப்பாணம்.

தகவல்
து.இராசலட்சுமி
(மனைவி)

(கி/1924)

---


## ஸ்ரீ செல்வா

(யாழ்ப்பாணம்)

விஜய், தேவயானி
சூர்யா
நடித்த

**"ப்ரண்ட்ஸ்"**

10-15 (ப. நே)
2-15 (ப. நே)
CD பிரதி
புதிய வெளியீடு

(கி 1910)


---


## யாழ். மத்திய கல்லூரி இல்ல மெய்வல்லுநர் போட்டி - 2001

27-01-2001 (இன்று) பிற்பகல் 1.00மணி

பிரதம விருந்தினர்:
**திரு. நா. க. சண்முகநாதபிள்ளை** அவர்கள்
[முன்னாள் அதிபர்]

பரிசில் வழங்குதல்:
**திருமதி க. பத்மாசனிதேவி** அவர்கள்

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்**

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்.

[கி-1925]


---


இலங்கை செஞ்சிலுவைச் சங்க
யாழ் - கிளைத் தலைமையகம்

## ஆண்டுப் பொதுக்கூட்டமும் புதிய கிளைக்குழு நிர்வாக உறுப்பினர்கள் பிரகடனப்படுத்தலும்

மேற்படி ஆண்டுப் பொதுக் கூட்டமும், ஏற்கனவே அறிவித்தவாறு 28 - 01 - 2001 ஆம் ஆண்டு ஞாயிற்றுக் கிழமை காலை 10 மணிக்கு யாழ்: மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

அத்தருணம் பிரிவுகளினால் ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளும், பதில் பிரதிநிதிகளும் தவறாது பொதுக் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**கௌரவ தலைவர்** **கௌரவ பதில் செயலாளர்**

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம்
யாழ். மாவட்டக்கிளை

73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.

(கி/1921)


---

## கண்ணீர் அஞ்சலி

எமது சக ஊழியர்
சுசிகரன்
அவர்களின் அன்புத் தந்தையார்

**பொ. துரைசிங்கம்**

அவர்கள் காலமானதையிட்டு எமது கண்ணீர் அஞ்சலியை காணிக்கையாக்குவதுடன், அவரின் குடும்பத்திற்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

வலம்புரிக் குடும்பம்

இப் பத்திரிகை ''வலம்புரி'' அன் கோ ஸ்தாபனத்தினரால் இல. 15 வெள்ளாந்தெரு. யாழ்ப்பாணம். எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2001ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 27ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.